உ
சிவமயம்





பொன்னாவெளியைப் பிறப்பிடமாகவும்,

பள்ளக்கட்டுவன், குமுழமுனை, முழங்காவில் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் சண்முகம் பாலசிங்கம்

(குமுழமுனை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பூசகர்)

அவர்களின் அம்பாள் திருவடிப் பேறு பெற்ற

31ஆம் நாள் நினைவு மலர்



# பாலபிஷேகம்

04.03.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

' வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்"



பூநகரி பொன்னாவெளியைப் பிறப்பிடமாகவும்
பள்ளிக்கட்டுவான், குமுழமுனை, முழங்காவில் ஆகிய
இடங்களை வதிவிடமாகவும் கொண்ட
உயர்குடித் தோன்றலும் , சைவ பக்தனும்,
பண்பாளனுமாகிய,
குமுழமுனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பிரதான பூசகர்

# அமரர் சண்முகம் பாலசிங்கம்

## அவர்களின் அம்பாள் திருவடிப் பேறு பெற்ற
## 31ம் நாள் நினைவுமலர்

# "பாலாபிஷேகம்"

## 04.03.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வேலமர நிழலமர்ந்த அன்னையை
வேண்டித் தினம் துதித்த பெரு மகனார்
பெரு ஆல விருட்சாய் நின்று - எமையெல்லாம்
அரவணைத்து நின்ற பெருந்தகையாம் எங்கள் ஐயா
குடும்பத்தின் குல விளக்காய்
குன்றென நிமிர்ந்து நின்ற எங்கள் குலக் கடவுள்
அமரர் சண்முகம் பாலசிங்கம் அவர்களின்
நினைவாய் இம் மலர்தனை
அவர் பொற் பாதம் சேர்ப்பித்து
பாலாபிஷேகம் செய்கிறோம்!



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணுலகில்
19.11.1937

அமரர்

விண்ணுலகில்
02.02.2021

# சண்முகம் பாலசிங்கம்

## திதி நிர்ணய வெண்பா

சார்வாரி வருஷமதில் தைத் திங்கள்
ஈர் பத்தாம் நாள் பகர்ந்த பஞ்சமித் திதி தனிலே
பூவிட்டு பூசித்து வாழ்ந்த பண்பாளன் பாலசிங்கம்
பார் விட்டு அவர் அம்பாள் பாதடி சேர்ந்தாரே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

அப்பனை நந்தியை ஆர அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊளி முதல்வனை
எப்பரிசாயினும் ஏத்தாடின் ஏத்தினால்
அப்பரிசிசன் அருள் பெறலாமே.

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

அரியானை அந்தணர் தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொலியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனை கடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத
நாளெல்லாம் பிறவா நாளே.

## திருவாசகம்

நெடுந்தாக நீ என்னை ஆட்கொள்ள
யான் ஐம்புலன்கள் கொண்டு
விடும் தகையேனை விடுதிகண்
டாய்? விரவார் வெருவ
அரும் தகை வேல் வல்ல உத்தர
கோச மங்கைக்கு அரசே
கடும் தகையேன் உண்ணும் தெள்நீர்
அமுதப் பெருங்கடலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

தன்னடி நிழற்கீழ் என்னையும் தனகத்த
சசிகுலா மவுலியைத்தானே
எண்ணிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழும் செழுஞ்சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை விழி
மிழலையுள் விளங்கும் வெண்பளிங்கின்
பொன்னடிக்கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டு கொண்டேனே.

## திருப்பல்லாண்டு

நிட்டையி லாவுடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கு என் அகம்நெகவூறும்
அமிர்தினுக்கு ஆலநீழல்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக ...... னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை ...... கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய ...... மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு ...... பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய ...... முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த ...... அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை ...... இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

# பண்பாளன் பாலசிங்கம் பயணித்த பாதை..!

## (அமரர் சண்முகம் பாலசிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு)

ஆசியாக் கண்டத்தின் முத்தெனத் திகழும் லங்காபுரியில், வடக்கே பூநகரி கடல் நீரேரியையும், கிழக்கே குடமுறுட்டி ஆற்றையும், தெற்கே மன்னார் வெல்லாங்குடா வெளியையும், மேற்கே இந்து மகா சமுத்திரத்தையும் எல்லைகளாக்கி, செந் நெல் விளையும் பெரும் விளை பூமியையும் ஆவினங்கள் செறிந்து வாழும் பல பிரதேசங்களையும் வனவளம், கடல்வளம், கனிவளம், கற்பகவனம், மேட்டு நிலப் பயிர் விளையும் பெரும் விளை பூமிகளையும் கொண்டதுவே பூநகரிப் பிரதேசமாகும். இப் பிரதேசத்திலே மண்டைக் கல்லாற்குத் தெற்காக தென்மேற்கே அமைந்துள்ள சிவ பூமி என அழைக்கப்படும் பொன்னாவெளி எனும் பொற் கிராமத்தில் காவல் தெய்வங்களாக மேற்கே சித்தி விநாயகப் பெருமானும் வடக்கே அண்ணாமலைச் சிவனும் கிழக்கே தாய்த் தெய்வமாம் கண்ணகி அம்மனும் தெற்கே காவல் தெய்வமாம் வையிரப் பெருமானும் காவலர்களாக உள்ளனர். இச் சிறப்புமிகு கிராமத்திலே உடையார் பரம்பரையுடன் வானலி கணபதி பரம்பரையினரும் வேறு சிலரும் இணைந்து கூட்டாக வாழ்ந்து வந்தனர். இவர்களிலே வானலி கணபதி பரம்பரையில் வந்த சண்முகம் செல்லம்மா இணையர்கள் விவசாயத்திலும் கால் நடை வளர்ப்பிலும் காவல் தெய்வங்களை பூசிப்பதிலும் ஆசார ஒழுக்க சீலர்களாக செழிப்புடனே வாழ்ந்து வந்தனர். இணையர்களின் செல்வச் செழிப்பான இல்லற வாழ்க்கையின் பயனாக ஏழு புத்திரச் செல்வங்களை ஈன்றெடுத்தனர்.

இவர்களின் சிவ தொண்டின் மகிமையால் மூத்த புதல்வியாக சிவகாமவல்லியும், ஏர் பிடித்த சிறப்பதனால் ஏகாம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் புதல்வனும், கண்ணியத்துடன் வாழ்ந்தமையால் கனகாம்பிகை எனும் கன்னியும், பண்பை பேணி வளர்த்திட பண்பாளன் பாலசிங்கமும், வந்தோர்க்கு அமுதழித்தமையால் அமிர்தலிங்கமும் தர்மத்தின் வழி நடந்ததால் தர்மலிங்கமும், இலட்சுமிகரமான வாழ்க்கைக்கு நன்கொடையாய் கடைக்குட்டி மகாலட்சுமியும் புத்திரச் செல்வங்களாகினர்.

இவர்களிலே நான்காவதாக 1937ம் ஆண்டு நவம்பர் 19ம் நாள் இப் புனித பூமியலே உதித்தவர் தான் எங்கள் எல்லோரின் பேரன்புக்குரிய பெருந் தெய்வம் "அன்பு அப்பா" என ஊரவர்கள் எல்லோராலும் அழைக்கப்படும் அமரராகிவிட்ட ஆசர சீலரான பண்பாளர் பாலசிங்கம் எனும் பெருந்தகையாவார்.

அன்னார் ஆரம்பக் கல்வியை நாவலரால் ஸ்தாபிக் கப்பட்ட முதற் பாடசாலையாம் பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்று வந்தார். பாடசாலைப் படிப்போடு மட்டும் நின்று விடாது, அக்காலத்திலேயே ஆலயங்களிலே புராணங்கள் படிப்பதையும் பயன் சொல்வதையும் தன் பெரும் பணியாக மேற் கொண்டு வந்தார். அத்துடன் தந்தைக்கு நல்ல புதல்வனாக, ஏர் பிடித்தல், ஆவினங்களைப் பராமரித்தல், பால் எடுத்தல், மாட்டுவண்டி ஓட்டல் என எல்லாவற்றையும் கைவரப் பெற்று தந்தைக்கு உதவியாய் தரமிகு புதல்வனாய் திகழ்ந்து வந்தார். சிறு பராயம் முதலே ஆலயத் தொண்டிலும், பூசைகள் செய்வதிலும் வல்லவராய் திகழ்ந்து பொன்னாவெளி கண்ணகி அம்மன் ஆலயம், வைரவர் ஆலயம் என்பற்றை பராமரித்து பூசை செய்து வந்ததுடன் 1980ம் ஆண்டு தொடக்கம் அன்னார் அம்மன் அடி சேரும் வரை குமுழமுனை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பிரதான பூசகராகவும், நிர்வாகத் தலைவராகவும் அரும் சைவப் பணியாற்றி வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிப வயதடைந்த போது அன்னாரின் பெற்றோர் பூநகரி மட்டுவில்நாடு கிழக்கு பள்ளக்கட்டுவானைச் சேர்ந்த கந்தையா-மீனாட்சி தம்பதிகளின் புதல்வியான சிவபாக்கியத்தை 1960 ஆண்டு அன்னாருக்கு இல்லறத் துணைவியாக்கி இன்புற்றனர். சில காலம் பள்ளகட்டுவானிலே வசித்து வந்து, நெடுங்குளம் பகுதியில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையையும் துரவு நீர்ப்பாசனத்தின் கீழ் செய்து வந்தார். அதன் பின்னர் அன்னாரின் குடும்பம், கரியாலை நாகபடுவான் திட்டத்தின் கீழ் குமுழமுனை கிராமத்திலே குடியேற்றக் காணியைப் பெற்று அதை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அங்கே 1970 ஆம் ஆண்டளவில் குடியேறினர். குடியேற்றக் காணியை அபிவிருத்தி செய்ததுடன் தகப்பனார் வழிவந்த நெற்காணிகளையும் செய்கை பண்ணி வந்தார். அதன் பின்பு அமரத்துவமடையும் வரை நாவலர் வீதி முழங்காவிலில் வசித்து வந்தார்.

அன்னாரின் இல்லற வாழ்க்கையின் பயனாய் அமரர் தனபாலசிங்கம், பெருந்தகையாக வாழும் பேரின்பநாதன், அமரர் யமுனாராணி, தெம்பாய் வாழும் தேவராணி, கதிர் எனப் பிரகாசிக்கும் கதிர்காமநாதன், தற்துணிவுடன் வாழும் தணிகாசலநாதன், கலகலப்பான கமலராணி, சாந்தமான சசிகலாராணி, கடைக்குட்டி பேபிராணி எனும் அரும் பெரும் புத்திரச் செல்வங்களைப் பெற்று சீர்மிகு வாழ்வுதனை வாழ்ந்து வந்தார்.

அமரரின் பிள்ளைகள் கல்விச் செல்வமதைப் பெற குமுழமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, முழங்காவில் மகா வித்தியாலயம், பூநகரி மகா வித்தியாலயம் என்பவற்றிலே கல்வி கற்க வழிசமைத்து கொடுத்து, அவர்களை ஒழுக்கமிகு சீலர்களாயும், பண்பாளர்களாயும், குறைவிலா சைவப் பற்று மிக்கவர்களாயும் சீரும் சிறப்புமாய் வளர்த்தெடுத்தார். இந் நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் வாழ்க்கையின் உயர்வை எண்ணி, அவர்களை படிப்படியாக தூரதேசம் அனுப்பி வைத்ததுடன் தன் அரவணைப்பிற்காக அன்பு மகள் ராசாத்தியை அருகிலேயே வைத்திருந்தார்.

பிள்ளைகள் தத்தம் திருமண வயதையடைந்ததும், குமுழமுனையைச் சேர்ந்த செபாஸ்தியாம்பிள்ளை–சிவயோகமலர் தம்பதிகளின் புதல்வி புஸ்பராணியை பேரின்பநாதனுக்கு துணையாகவும், கள்ளியடியில் வசித்து வரும் தனது தமக்கை சிவகாமல்லி–நடராஜர் தம்பதிகளின் புதல்வனை தேவராணியின் துணைவனாகவும், கச்சாயைச் சேர்ந்த விநாயகமூர்த்தி–சௌந்திரவல்லி தம்பதிகளின் புதல்வி சுதாரஞ்சினியை கதிர்காமநாதனின் துணைவியாகவும், மன்னாரைச் சேர்ந்த காளிமுத்து–இந்திராணி தம்பதிகளின் புதல்வன் சங்கரை கமலராணியின் கணவராகவும், கச்சாயைச் சேர்ந்த ஏகம்பரம்–அன்னமுத்து தம்பதிகளின் புதல்வன் சிவகுமாரை சசிகலாராணிக்கு கணவராகவும், முழங்காவிலைச் சேர்ந்த சச்சிதானந்தம்–செல்வராணி தம்பதிகளின் புதல்வி ஸ்றெனியாவை தணிகாசல நாதனுக்கு துணைவியாகவும், பூநகரியைச் சேர்ந்த முத்துலிங்கம்–குணலட்சுமி தம்பதிகளின் புதல்வன் றமேஸை பேபிராணியின் கணவராகவும் கரம் பிடித்து கொடுத்து ஆசிர்வதித்து மன மகிழ்ந்தார்.

பிள்ளைகளின் சீரும் சிறப்புமான இல்லற வாழ்வின் பயனாக விஜித்தா, பிரதீபன், டிசாந்தன், அனுஷன், திஷாநந்தினி, ஜெனார்த்தனன், அபிநயன், அஞ்சயன், அரண்யா, சம்மியா, பிரித்தியா, சரண்யா, தனுசன், சிலக்சன், கவிசன், சஜின் எனும் பேரச் செல்வங்களையும் அர்ஸினி எனும் பூட்டிச் செல்வமதையும் பெற்று அம் மழலைச் சொற்களில் மகிழ்ந்துலாவினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாவெளியில் வாழ்ந்த காலத்திலே படிப்பு முடிந்ததும் வேரவில் வைத்தியசாலையில் சேவையாற்றினார். பின்னர் குமுழமுனையில் வாழ ஆரம்பித்த காலத்தில், பூநகரி பல நோக்குக் கூட்டறவுச் சங்க கிளையில் அவரின் ஒன்று விட்ட அண்ணா அமரர் அருணாசலம் அவர்களோடு இணைந்து பணியாற்றினார். அதன் பின் புங்குடுதீவைச் சேர்ந்த நாகேஸ் குடும்பம், திருமதி.தனலட்சுமி குடும்பம், செல்லையா குடும்பம் என்பவர்களால் பராமரிக்கப்பட்டு வந்த ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் சிறிய கோவிலிலே பூசை செய்யுமாறு அன்னாரை அவர்கள் வேண்டினார்கள். அவ்வாலயம் சிறிய வேப்பமரத்தின் கீழ் உயிருள்ள அதிசயமான ஆலயமாக திகழ்ந்தது. அவ்வாலயத்தில் அம்பாள் அடிக்கடி தரிசனம் கொடுப்பதையும் அவர் நன்கறிந்தார். ஆரம்பத்தில் பூசை செய்ய பின் நின்று சம்மதம் தெரிவிக்காத நிலையில், தனது காணியிலே கொட்டிலில் படுத்திருந்த வேளையில் அம்பாள் சுயரூபத்தில் அவர் அருகே வந்து காட்சி கொடுத்ததை தொடர்ந்து, அவர் பூசை செய்வதற்கு சம்மதம் தெரிவித்ததுடன் அந்த சம்மதத்தை அமரத்துவம் அடையும் வரை பேணினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த செய்தியை தனக்குள்ளேயே வைத்திருந்த அவர், அமரத்துவமடைவதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பே தனக்கு நெருக்கமானவர்களுக்கு எடுத்துக் கூறினார். அத்துடன் ஆலயத்தின் ஆரம்ப கால அபிவிருத்தியிலும் அன்னதானத்தை ஏற்பாடு செய்வதிலும் விசேட பூசைகளை ஏற்பாடு செய்வதிலும் புங்குடுதீவைச் சேர்ந்த பிரபல வர்த்தகர்களான ஏகாம்பரம், சிவசாமி என்போரது ஆதரவையும் பெற்று நடைமுறைப்படுத்தி வந்தார்.

1980ம் ஆண்டிலிருந்து அமரத்துவமடையும் வரை இவ் ஆலயத்தில் தலைவராகவும், பிரதான பூசகராகவும் கடமையாற்றி வருடந்தோறும் இடம்பெறும் வைகாசி விசாகப் பொங்கலை பத்ததி முறையிலே தனது குருவான அமரர் நடராஜர் தலைமையிலே


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உணர்வு பூர்வமாக நடாத்தி வந்துடன் 1995ம் ஆண்டு அம்பாளுக்குரிய எழுந்தருளியை உருவாக்கி ஆலயத் தொண்டர்களின் அனுசரணையுடன் வருடந்தோறும் அலங்காரத் திருவிழாவையும் செய்து வந்தார். அத்துடன் ஆலயத் திருப்பணிகளாக மண்டபங்களையும் ஏனைய திருப்பணி வேலைகளையும் வெளிநாட்டு உள்நாட்டு அடியார்களின் உதவியுடன் அயராது முயற்சித்து சிறப்பாக அமைத்தார். மணிக் கோபுரம், வசந்த மண்டபம், சுற்றுக் கொட்டைகள், அன்னதான மடம், வாகனங்கள் என மிளிர்ந்து நிற்கும் ஆலயம் இதற்குச் சான்றாகும். ஆலயத்துடன் இணைந்திருந்த வேளையில் மூன்று கும்பாபிஷேகங்கள் அன்னாரின் கைங்கரியத்தால் நிறைவு பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பூநகரியில் அமைந்துள்ள பள்ளகட்டுவான் வைரவர் கோவில், பிள்ளையார் கோவில், பொன்னாவெளியில் அமைந்துள்ள அம்மன் கோவில், வைரவர் கோவில் ஏனைய அயற் கோவில்களிலும் விசேட வைபங்களை ஆசார முறைப்படி சிறப்பாக நடாத்தி கொடுத்து வந்தார். ஆரம்ப காலத்திலிருந்து கதிர்காமக் கந்தனை சென்று தரிசிப்பதையும் தவற விடமாட்டார். கதிர்காமத் தீர்த்தத் திருவிழா அன்று முழங்காவில் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் தீர்த்தத் திருவிழா உபயத்தையும், முழங்காவில் ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் ஆலய உபயமொன்றையும் செய்து வந்தார். மேலும் ஆலயத்தில் இன்னும் சிறப்பாக பூசைகளை மேற்கொள்வதற்காக வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற வேதாகம பயிற்சி நெறியில் பங்கு பற்றி விசேட சான்றிதழையும் பெற்றிருந்தார். தனது வாழ்நாளில் இந்தியா சென்று அங்குள்ள ஆலயங்கள் பலவற்றை தரிசித்து ஆசியும் பெற்று வந்தார். நோய்வாய்ப்பட்ட தருணத்தில் கூட வேரவில் குமாரசாமி ஐயா பரம்பரை வந்த விஸ்ணு ஐயாவை வழிநடத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளிற்கு குறைவில்லா பூசை செய்வதற்கு வழிசமைத்து கொடுத்தார். அது மட்டுமில்லாமல் இறுதியாக இவ்வாண்டு இடம் பெற்ற பொங்கலுக்கு உடல் நலக் குறைவின் போது கூட சென்று அம்பாளினுடைய வழுந்தை தூக்கி வைத்து இயலாமையில் கூட இறை தொண்டில் இன்புற்றார்.

அன்னார் அம்பாளின் அருளினால் நூல் கட்டுதல், பார்வை பார்த்தல் எனும் தெய்வக் கைங்கரியங்களினால் ஏராளமான அடியவர்களை நோய் நொடி துன்பங்களிலிருந்து காப்பாற்றிய உன்னதமான பணியை ஊர் நன்கறியும். அது மட்டுமில்லாமல் காவடி, தீ மிதித்தல் என இறை பக்தியில் விஞ்சி நின்றார். குமுழமுனை கிராம முன்னேற்ற சங்கத்துடன் இணைந்து கிராம அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி என்பவற்றிலும் தனது பங்களிப்பபை வழங்கினார்.

பிள்ளைகள் பேரப்பிள்ளைகளைக் காணும் ஆவலில் நோர்வே நாட்டிற்கும், ஆசை அக்காவைப் பார்பதற்கு பிரான்ஸ் நாட்டிற்கும் சென்று வந்தார்.

அன்னாரது சிரித்த முகமும், கம்பீரமான தோற்றமும், விபூதிப் பூச்சும், சந்தனப் பொட்டும், நிமிர்ந்த அமைதியான நன் நடையும் எல்லோரையும் கவரும் சிறப்பு மிகு அம்சங்களாகும்.

அண்மையில் முழங்காவில் மன்னார் வீதியில் இடம்பெற்ற சிறிய ஒரு விபத்தினால் நோய் வாய்ப்பட்டு சிறிது காலம் வைத்திய உதவிகளுடன் வாழ்ந்து வந்த அன்னார், 02.02.2021 அன்று அந்தி சாயும் வேளைதனில், அவர் பூவிட்டு பூசித்த அம்பாளினுடைய பாதார விந்தங்களை சரணாகதி அடைந்தார். அன்னாரின் ஆத்மா அமைதி கொள்ள அவர் பூசித்த அத்தனை கடவுள்களையும் பிரார்த்தனை செய்வோமாக.

ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மன் சந்நிதானத்தில் அன்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ரை ஐயா என்னை விட்டேன் சென்றீர்..?

எண்ணி எனை நாளும் வாழ்ந்து
ஏற்றமிகு இல்லற வாழ்வு தந்து
எனைக் கொண்ட நாள் முதலாய்
எனக்காய் வாழ்ந்த என் ஐயனே..!

துணையாய் எனைக் கொண்டே
இணையாய் இன்புற்று வாழ்ந்தீர்..!
மகவாய் செல்வங்கள் பெற்றே
மன மகிழ்ந்தே வாழ்ந்தோம் நாளும்..!

துயரது எதுவும் எனை சூழாமல்
அயராது அன்பதைக் கொட்டித் தீர்த்தீர்..!
விடையது பெற்றே சென்றீர் ஏனோ..? - மீளாத்
துயரது சூழ்ந்தது எனையே ராசா..!

எக் கஸ்டமும் எனக்கு தராமல்
எல்லாம் உம் முதுகேற்றி சுமந்தீரே..! - என்
வாடிய முகமது கண்டாலே
நாடி வந்து நயவுடன் சொல்வீர் நல் வார்த்தை..!

அம்மா என்றே எனை அழைத்து
அன்பை அள்ளித் தந்த என் ஐயனே..!
சும்மா கூட என் மேலே கோபம் கொண்டு
வன்பை விதைத்ததாய் நினைவேயில்லை..!

வருத்த துன்பம் எனை வதைத்தாலே - உம்
வதனம் வாடி வதங்கித் துடித்திடுமே..!
உதவி ஒத்தாசை செய்தெனக்கு
ஓய்வைத் தந்தே தேற்றிடுவீர்..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் செல்வமும் நிறைவாய்த் தந்தே
எந்தக் குறையும் எந்தனுக்கின்றியே
நிம்மதி தனை நித்தமும் தந்தே
நிறைவாய் எனக்கோர் வாழ்வு தந்தீர் என் ஐயா..!

மகவாய் பலரும் மகிழ்ந்திருக்க
பேரன், பேத்தி, பூட்டி என
பேரின்ப வாழ்வு சூழ்ந்திருக்க
எல்லாம் போதும் என்றோ சென்றீர் என் ஐயா...?

உம் பூஜிப்பில் எக்குறையும் இவ் ஊரறியா – நீர்
எனை நேசிப்பதில் குறையதற்கே இடமில்லை..!
உம் கரம் பற்றிய நாள் முதலாய்
என் கண்கள் கலங்கியதில்லை எந் நாளும்..!

எப்போதும் கல கலப்பாய் வீட்டினிலே
என்னோடு உறவாடும் என் ராசா
இப்போது எனை விட்டு எங்கு சென்றீர்..?
இல்லமே அமைதியாய் இருள் கொள்கிறது..!

நேசிப்பில் எக் குறைதான் கண்டீரே..?
பூஜித்த அம்மன் அவள் மறந்தாளோ..?
பூமி தனக்கு பாரமென்று நினைத்தீரோ..?
உம் பணிகள் முடிந்ததென்று சென்றீரோ..?

கண்ணயர்ந்து போனதேனோ என் ஐயா..? – உம்
கண்மணியாய் உம்மோடு நானிருக்க..!
மண்ணழந்த காலம் போதுமென்றோ
விண்ணுலகம் அழைத்தாளோ அம்மன் அவள்..?

ஆத்மார்த்தமான உம் நினைவுகளோடு – உம்
ஆத்மா சாந்தி கொள்ள – உமை
ஆண்ட அம்மன் அவள் – திரு
அடிப் பாதம் பணிந்து வணங்குகிறேன்...!

நீங்கா நினைவுகளுடன்,
அன்பு மனைவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுயிர்த் தந்தையே...!

பிறப்பும் இறப்பும்
மண்ணில் மாந்தர்க்கு இயல்பாம் – ஆனால்
உங்கள் இறப்போ
நெஞ்சில் நெருப்பாய்
எரிகிறது தந்தையே..!

பொன்னாவெளி பெற்றெடுத்த பெருமகனே
நற்குணம் கொண்ட நாயகனே..!
அன்பின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
வாழ்ந்த எங்கள் பெருந்தகையே..!

அப்பா...
உங்கள் முகம் காணாமல்
முழங்காவில் மண்
முழக்கமிட்டு நிற்கிறது..!
முத்துமாரி அம்மன் கோவில்
வெறிச்சோடிக் கிடக்கிறது...!

என்னுயிர்த் தந்தையே
உங்கள் முகம் காண
கடல் தாண்டி ஓடி வந்தேன்
காலத்தின் கோலத்தால்
காத்திருந்து கடைப் பயனாய்
சில மணி நேரம் உங்கள்
முகம் பார்த்து கதறியழுது
கலைந்து சென்றேன்..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபிறவியிலும் மீண்டும் – உங்கள்
மகனாயே பிறந்திட வேண்டும்...!

எங்கள் குடும்பத்தின்
பெரும் விருட்சம்
அடியோடு சாய்ந்ததுவே..!
விழுதுகள் நாம்
அந்நிய தேசமதில்
அனாதையாய் அழுகின்றோம்...!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறை தெய்வத்துள் வைக்கப்படுவர் என்னும்
வள்ளுவரின் வாக்குபோல்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறோம்..!

மகன் பா .பேரின்பநாதன்
(நோர்வே)

துன்பம் இல்லாத இன்பமோ.
தீமை இல்லாத நன்மையோ
ஒரு போதும் இருக்க முடியாது.
வாழ்வு என்பது சமச்சீர் நிலையை
இழந்த ஒரு நிலை. நாம் விரும்புவது
முக்தியே தவிர வாழ்வு அல்ல
இன்பம் அல்ல. நன்மையும் அல்ல
– சுவாமி விவேகானந்தர் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமாற்றி விட்டீர்களே ஐயா...?

ஐயா என்றால் எனக்கு பயத்தோடு கலந்த பாசம். ராசா என்று என்னை செல்லமாகக் கூப்பிடுவீர்கள் ஐயா. பதினைந்து வயதில் என்னை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தீர்கள். அதனால் நீண்ட காலம் உங்களைப் பிரிந்து வாழ்ந்து விட்டேன். ஐயா உங்களை 2018 ஆம் ஆண்டு வந்து பார்த்து விட்டுத் திரும்பினேன். அதுதான் இறுதிச் சந்திப்பென்று அப்போது நான் நினைத்துப் பார்க்கவில்லை. ஐயா உங்களுக்கு உடல் நலம் இயலாமல் இருக்கும் போது ஒரு முறையாவது வந்து பார்க்கலாம் என்று நினைத்தேன். ஏமாற்றி விட்டீர்களே? ஐயா ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் உங்கள் குரலைக் கேட்டுக் கொண்டிருந்தேன். எங்களைப் பார்க்காமல் போவீர்கள் என்று நினைக்கவில்லை. எல்லாம் கனவாக மாறி விட்டது. ஐயா உங்களின் இறுதி நிகழ்வுக்குக் கூட வரமுடியாமல் வீடியோவில் பார்த்து கண்ணீர் விட்டோம்.

**நீங்கள் காட்டிய பாசத்துடன்**
**மகன் கதிர்**

"உண்மைக்காக எதையும்
தியாகம் செய்யலாம்,
ஆனால் எதற்காகவும்
உண்மையைத் தியாகம்
செய்யக் கூடாது."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பிற்கும் பாசத்திற்கும் இலக்கணமான என் ஐயாவிற்கு...!

பொன்விளையும் பூமியாம் பூநகரியிலே என்னை பெற்றெடுத்தீர்கள். ஐயா என உங்களை மிக அன்பாக அழைத்தேன். அன்பும் பாசமும் காட்டி எம்மையெல்லாம் வளர்த்தீர்கள். செல்லம் செல்லம் என அன்பாக என்னை அழைப்பீர்களே.!

எனது இளமைப்பருவத்தை குமுழமுனையிலும், முழங்காவிலிலும் உங்களுடன் கழித்த அந்தக் காலங்கள் என்றென்றும் மறக்க முடியாதவை. அவற்றை சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை ஐயா. இந்த வாழ்க்கைக்கு படிப்பு மட்டுமல்ல படிப்புடன் கூடிய அனுபவங்களும் தேவை என நீங்கள்தான் கற்றுத் தந்தீர்கள்.

தரணி போற்றும் கமத்தொழிலையும் எனக்குக் கற்றுத் தந்தது மட்டுமல்லாது என்னோடு நின்று தோள் கொடுத்தீர்கள். அந்த இனிமையான நாட்கள் என் கண் முன்னே வந்து செல்கிறது. உங்கள் அருகில் நான் இருந்த ஒவ்வொரு நொடிகளும் பொன்னானவை.

பல அறிவுரைகளையும் நன்னெறிகளையும் கூறி எங்களை வழிகாட்டினீர்கள். 23 வருடங்கள் உங்கள் அருகிலேயே என் பயணம் தொடர்ந்தது. அந்த இனிமையான காலங்களை எப்படி மறப்பேன்..?

காலச் சூழ்நிலை காரணமாக உங்களை விட்டு பிரியும் நிலை வந்தது. என் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக பிரிவின் துயர்தனை தாங்கிய வண்ணம் என்னை வழியனுப்பி வைத்தீர்கள். வருடங்கள் உருண்டோடி மறைந்தன. அதன் பின் நீங்களும் வெளிநாடு வரும் சந்தர்ப்பம் கிடைத்தது. பல நாடுகளுக்கும் சென்று பல இடங்களையும் பார்த்து மகிழ்ந்தீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு வருடங்களின் பின் உங்களிடம் நான் மீண்டும் வந்தேன். அப்போது எனது திருமணத்தை மிகச் சிறப்பாக நடாத்தி ஆசீர்வாதத்தையும் அள்ளி வழங்கினீர்கள். அதன் பின் அடிக்கடி உங்களை பார்க்கும் சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்தது. நீங்கள் பூசிக்கும் அம்மன் அருளால் ஒவ்வொரு வருடமும் கோயில் பொங்கலுக்கு உவ்விடம் வரும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அம்மனின் தரிசனமும் ஐயாவின் தரிசனமும் கிடைத்தது மிக சந்தோசமாக காலங்கள் கடந்து ஓடின.

கடந்த மூன்று வருடங்களாக எவ்வளவோ முயற்சித்தும் இறுதியில் என்னால் அங்கு வர முடியவில்லை. சில மாதங்களுக்கு முன் இடியென வந்தது நீங்கள் சுகயீனம் உற்ற செய்தி. அதைக்கேட்டு என் நெஞ்சம் பதை பதைத்தது. இந்த நேரத்தில் உங்கள் அருகிலிருந்து உங்களை கவனிக்க முடியவில்லையே ஐயா என மனம் நாளும் தவித்தது. முயற்சித்தும் எவ் வழியும் கிடைக்கவில்லை உவ்விடம் வந்து சேர. கடவுள் உங்களின் இறுதி நேரத்தை முடிவு செய்து விட்டான் என்பதனை என் மனம் அறிந்து மிகத் துவண்டு போனது. ஒரு முறையாவது அங்கு வந்து உங்கள் அருகில் இருந்து உங்கள் கரம் பற்றி கண்ணீர் விட மாட்டேனா என மனம் துடியாய் துடித்தது ஐயா.

உங்களைப் பார்த்து கதைக்கும் போதெல்லாம் உங்களிடம் இருந்து வார்த்தைகளுடன் கண்ணீரும் முத்து முத்தாக உதிர்ந்ததே ஐயா. அந்தக் கண்ணீரே ஆயிரம் கதை சொன்னது. உங்களின் துன்பத்தில் உங்கள் செல்லமாய் என்னால் பங்கெடுக்க முடியவில்லை. என்னதான் இளைய மகனாக இருந்தாலும் பல ஆலோசனைகளை என்னிடம் கேட்பீர்களே. செல்லம் இதனை அப்படிச் செய்யவா? இப்படிச் செய்யவா? என்றெல்லாம் கேட்பீர்களே. அந்தக் குரல் இப்போது ஓய்ந்து விட்டதா ஐயா? உங்களது இறுதி நிகழ்வை பிள்ளைகள் ஒருவரையும் எதிர்பார்க்காது உடனே செய்து முடிக்க வேண்டும். யாருக்காகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உடல் காத்திருக்கக் கூடாது என்று அடிக்கடி கூறுவீர்களே. அப்படியே யாருக்காகவும் காத்திருக்காமல் சென்று விட்டீர்களே? இறுதிவரை உங்கள் கரம் பற்றி ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்து என் கடமைகள் அனைத்தும் செய்ய நினைத்தது எல்லாம் கனவாகிப் போனதுவே. ஆனால் நான் தொலைபேசியில் அழைத்த போது உங்களின் இறுதி நேரத்தை என் கண்முன்னே நிறுத்தி எம்மை எல்லாம் தவிக்க விட்டு சென்று விட்டீர்களே ஐயா...?

ஐயா..! ஐயா..! என்று நான் அழைக்கும் குரல் உங்களிடம் இன்னும் வந்து சேரவில்லையா..? இறுதிக் கடமைகள் எதையும் முன்னின்று செய்ய முடியவில்லையே என நாளும் உள்ளம் குமுறுது ஐயா. ஏன் இந்த தண்டனை எமக்கு? என் ஆலமரம் அடியோடு சாய்ந்ததோ..? உங்கள் விழுதுகளான எங்களால் உங்களை தாங்கிப்பிடிக்க முடியவில்லையே..? உங்கள் பிரிவை என்னால் இன்னும் ஜீரணிக்க முடியவில்லை ஐயா...!

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
மகன் செல்லம்

வாழ்க்கை என்பது போர்கள், தவறுகள்
திருத்தங்கள் இவற்றின் ஒரு தொடர்.
வாழ்க்கையின் ரகசியம் பலவகை
அனுபவங்களிலிருந்து அறிவு பெறுவதே.
ஆனால் உண்மையான அறிவு கிடைத்ததும்
வாழ்க்கை முடிந்து விடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவோடு வாழும் எங்கள் ஐயாவிற்கு...

நீறாகும் சிறு வாழ்வில்
நினைவாகி நிறைந்து நிற்கும் ஈசனே,
எங்களின் ஐயாவே..!
ஆண்டாண்டு தோறும்
இனி நாம் அழுது புரண்டாலும்
மீண்டு வரப்போவதில்லை நீங்கள்

"ஐயா" என்றழைக்கும்
எங்கள் குரல் கேட்டு
எழுந்து வரப் போவதில்லை இனியும்,

புன்னகை ததும்பும்
பூக்களென வார்த்தைகளைக் கோர்த்து
எமை அழைக்கும் நீங்கள்
நீறிட்ட மேனியனின்
திருவார்த்தை செவிக்கேட்டு
விடைபெற்றுச் சென்றீர்களோ ?

பொட்டிட்டு பூவிட்டு,
பட்டாடை புனைவித்து
கைப்பிடித்து கல்வி தந்து
காலத்தையும் கற்றுத் தந்து
இப் பூவுலகில் நாம் வாழ
நலம் பல நன்றே செய்து
ஞாலத்தில் உம் மகள்களை
சூரியனாய் ஒளிரவைத்தீர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றோ,
காலத்தின் கணக்கறிந்து
பெரும் காயத்தை கழைந்தெறிந்து
விடை பெற்றுச் சென்று விட்டீர்கள்

கசிகிற கண்ணீரில்
கரைந்துருகி வழிகிறது உங்கள் நினைவுகள்

ஐயா !!
நீங்கள் விட்டுச்சென்ற நினைவுகளை
உங்கள் மகள்கள் நாம்
கட்டிக்கொண்டு பயணிப்போம்
ஞாலத்தில்
நம் காலம் உள்ளவரை !!

நினைவுகளை சுமந்து நிற்கும்
உங்களின் மகள்கள்
தேவராணி, ராசாத்தி, சசி, பேபி.

எழுந்திருங்கள், விழித்திருங்கள்,
இனியும் உறங்காதீர்கள்.
எல்லா தேவைகளையும்
எல்லா துன்பங்களையும் தீர்க்கும்
ஆற்றல் உங்கள் ஒவ்வொருவரிடமும்
இருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைக்குட்டி பேபியின் (வினைச்சி) கண்ணீர்துளி

"குலத்தின் பெரு கோயிலின் முதல் முதல் குண விளக்கு அணைந்ததோ! எம் உறவின் தாய் மனம் எம்மை தனியாக்கி விட்டு சென்றதோ"

ஐயா... ஐயா... ஐயா.. என்று இனி யாரை கூப்பிடுவது. நீங்கள் இப்போது எங்களுடன் இல்லை என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நடந்ததை நினைத்து என்னால் ஆறா அமர முடியவில்லை ஐயா. அந்த கடைசி ஒரு நிமிடம் எங்களை பார்த்தது இன்னும் என் கண்ணுக்குள் இருக்கிறது. அந்த பார்வையில் எத்தனை ஏக்கம் எத்தனை கேள்விகள் இருந்திருக்கும். எதையும் கேட்காமல் போய் விட்டீர்களே ஐயா. ஒரு வார்த்தையாவது கதைத்திருக்கலாமே ஐயா! இரண்டு நாட்கள் எதுவுமே கதைக்கவில்லையே நினைக்க நினைக்க நெஞ்சே வெடித்திடும் போல் இருக்கிறது ஐயா. கடைசியா நான் உங்களுடன் கதைக்கும் போது என்னைத் தெரியுதா? என்று கேட்ட போது ஒ..... தெரியுது வினைச்சி, இது கேட்க தானே ஆசைப்பட்டாய் என்று சொன்னீர்கள் இது தான் என்னுடன் கதைத்த கடைசி வார்த்தைகள் ஐயா!

ஐயா நான் உங்களுடன் இருந்த காலம் கொஞ்சம் ஆனால் இருந்த காலத்தில் உங்களுடன் சரிக்கு சரி வாய்க்கு வாய் கதைக்கிறது நானாகத்தான் இருக்கும். கடைசியா நான் இலங்கை வந்த போது செல்லம் அண்ணாவிடம் சொன்னீர்கள் இதுகளுக்கு அடி இல்லாத குறை என்று அப்போது அண்ணா சொன்னார் என்னோட அப்படி கதைக்கிறது இல்லை. உங்களுடன் மட்டும் தான் நான் கதைக்கிறனான் என்று இனி யார் கூட ஐயா கதைப்பது? சாப்பிட்டு முடித்து ஒரு புடி சாப்பாட்டுடன் கோப்பையை தருவீர்கள் சாப்பிடு புள்ள என்று இனி அப்படி எல்லாம் யாரிடம் வாங்கி சாப்பிடுவது ஐயா!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஐயா என்னும் கொஞ்ச காலம் எங்களுடன் இருக்க வேண்டும் என்று உங்கள் பிள்ளைகள் அனைவரது ஆசையுமாக இருந்தது. ஆனால் காலம் இடம் கொடுக்கவில்லை. விதியை மதியால் வெல்லலாம் என்று சொல்வார்கள். ஆனால் உங்களுக்கு வந்த விதியை எங்களால் வெல்ல முடியவில்லை எவ்வளவு காசு வசதி இருந்தும் எதுவும் செய்ய முடியாமல் கூனி குறுகிப் போனோம் ஐயா உங்கள் பிள்ளைகள்.

ஐயா, நீங்கள் எங்களுடன் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம், ஆனால் நீங்கள் கஸ்டப்படணும் என்று நினைக்கவில்லை. கடமைக்காவது பிள்ளை என்று சொல்வார்கள் ஆனால் அந்த கடமை செய்ய கூட எங்களுக்கு இடமளிக்க இல்லையே. ஐயா எதுக்கும் யாரையும் நீங்கள் எதிர்பார்ப்பது இல்லை உங்கள் கடைசி நிமிடத்தில் கூட எங்களை எதிர் பார்க்கவில்லையே ஐயா.

ஐயா உங்களை எத்தனையோ பேர் கை எடுத்து கும்பிட்டதை பார்த்திருக்கிறேன். அதை பார்த்து சந்தோசப்பட்டு பேரானந்தம் கொண்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் கடைசி நேரத்தில் பெரியவர் சிறியவர் என்று பார்க்காமல் கை எடுத்து கும்பிட்டு கும்பிட்டு கதைத்ததை பார்த்து என் நெஞ்சே வெடித்து போய் விட்டது ஐயா. என் மனம் ஆறுதே இல்லை ஐயா.


கோழி அதன் குஞ்சுகளை பாதுகாப்பது போல் இவ்வளவு காலமும் எங்களை பாதுகாத்து வந்தீர்கள். இனியும் எங்களை அவ்வாறு பாதுகாத்து நல்லது கெட்டது அனைத்தையும் எங்களுக்கு தெரியப்படுத்துவீர்கள் என்று நான் நம்புகிறேன் ஐயா.

நீங்கள் இருந்த வரை வலிக்கவில்லை இப்போ இதய மெல்லாம் வலிக்கிறது. யாருக்கு ஆறுதல் சொல்வோம் யாரிடம் ஆறுதல் பெறுவோம். இரண்டுக்கும் உரியவர் நீங்கள் அல்லவா. சென்று வாருங்கள் மீண்டும் குண வள்ளல் பூவாய் இப் பூமியில் ஆள, இறைவன் அருள் தருவான். வந்து ஆளுங்கள் ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !!!

கடைக்குட்டி
பேபி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிக் காட்சி கண் முன்னே மாமா..!

அன்புள்ள மாமா நீங்கள் இல்லாத இடம் மிக வெறுமையாக இருக்கிறது. வெளிச்சம் இல்லாத இடம் போல் இருக்கிறது மாமா. உங்கள் அன்பு சொல்லி தீராது. உங்கள் இடத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது. உங்களுக்கு நிகர் நீங்கள்தான் மாமா. நீங்கள் இல்லை என்று நினைக்கும் போது மிகவும் கலங்கி நிற்கிறேன். கடைசியாக கதைத்த போது எம்மைப் பார்த்து "பாய்" சொன்னீர்கள். அதுவே உங்களை நாங்கள் பார்த்த கடைசிக் காட்சி "பாய்" சொல்லி பறந்து போய்விட்டீர்களே மாமா. உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும். உங்கள் பிரிவால் வருந்துகிறேன் மாமா.

உங்கள் அன்பு மருமகள்
தேவநாயகி(புஸ்பராணி)

---

## மருமகள் நினைவில்..

எப்போதும் உங்களை அப்பா என்று அழைத்த மருமகள்.
உங்கள் நீங்காத நினைவுகளுடன் வருந்துகிறேன்.

மருமகள் சுதா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பின் குலவிளக்கான பாசமிகு மாமாவிற்கு..!

அன்பின் உறைவிடமாய்

பாசத்தின் பிறப்பிடமாய்

பண்பின் உருவாய் என்றும் திகழும் எனதருமை மாமாவிற்கு சமர்ப்பணம்,

சிறு வயதில் இருந்தே "கோயில் மாமா" "கோயில் மாமா" என்று அன்பாக அழைத்து வந்தேன். குமுழமுனையில் இருந்து முழங்காவில் நோக்கி துவிச்சக்கர வண்டியில் வந்து எங்களை நலம் விசாரிப்பீர்களே. இப்போது அந்தக்குரல் ஓய்ந்ததோ? உங்கள் கம்பீரமான தோற்றமும் பணிவான பேச்சும் இப்பொழுதும் என் கண்முன்னே வந்து செல்கிறது.

காலங்கள் கடந்தோடின எனக்கு திருமணமும் நிச்சயிக்கப்பட்டது. என்னை உங்கள் மருமகளாக்கி மகிழ்ந்தீர்கள். எப்போதும் பல அறிவுரைகளும், புத்திமதிகளும் உரிமையோடு கூறுவீர்கள். எனக்கு ஒரு மாமாவாக மட்டுமல்லாது ஒரு ஆசானாகவும், தந்தையாகவும் இருந்திருக்கிறீர்கள். உங்கள் அன்பும் பாசமும் இனி எப்படி கிடைக்கும் எனக்கு?

வெகு விமர்சையாகவும் சிறப்பாகவும் எமது திருமணத்தை நடாத்தி அன்பையும் ஆசீர்வாதத்தையும் அள்ளி வழங்கி அழகு பார்த்தீர்கள். அத்தருணத்தில் உங்களின் எல்லா பிள்ளைகளும் ஒன்று கூடி மகிழ்வாக இருந்தார்கள். அப்படி ஒரு நேரம் இனி எப்போதும் கிடைக்கப்போவதில்லை.

அதன் பின் ஒவ்வொருவரும் தூரதேசம் சென்று விட்டோம். நானும் சென்று விட்டேன். எனக்கு கிடைக்கவேண்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமும் அரவணைப்பும் கிடைக்கவில்லை. அவ்வப்போது தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினேன்.

அப்படியே ஆறு வருடங்கள் உருண்டோடின அதன் பின் உங்களின் அருமைப் பேத்திகளுடன், உங்கள் ஆசீர்வாதம் அவர்களுக்கு கிடைக்க வேண்டுமென ஒடி வந்தோம். உங்களின் அன்பையும் பாசத்தையும் அவர்கள் மீது வாரி வழங்கினீர்கள். அதை பார்த்து நான் மிக மகிழ்ந்தேன்.

அப்படியே இரண்டு மூன்று தடவை விடுமுறைக்கு வரும் போதும் பிள்ளைகளோடு விளையாடினீர்கள். அன்பையும் பாசத்தையும் வழங்கினீர்கள். குறுகிய காலங்களே ஆனாலும் அது எமக்கு நீண்டகாலமாகக் காணப்பட்டது. ஆனாலும் இன்னமும் என் பிள்ளைகளுக்கு உங்களிடம் இருந்து ஆசீர்வாதமும், அறிவுரைகளும், அன்பும், பாசமும் நிறைய கிடைக்க வேண்டும் என எதிர்பார்த்தேன். ஆனால் அது எதுவும் நிறைவேறாத கனவாகவே போய்விட்டது.

இறுதியாக அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வுக்கு பேத்திகளுடன் வந்து உங்களோடு சில தினங்கள் சந்தோசமாக கழித்தோம். அதுதான் உங்களோடான கடைசி நாட்கள் என அப்போது அறிந்திருக்கவில்லை. இனி அப்படி ஒரு காலம் எமக்கு இல்லை. நீங்கள் சுகயீனம் உற்று இருந்த வேளை அருகில் இருக்க முடியவில்லை.

காலத்தின் கோலத்தால் வெளியூரில் இருந்து பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஒருவரும் உங்களுக்கு ஆதரவாகவும், ஆறுதலாகவும் இருக்க முடியவில்லை. கடமைகளை செய்ய முடியவில்லை.

தொலைபேசியிலே உங்களுடைய குரலையும், உங்கள் கண்ணில் இருந்து வரும் கண்ணீர் துளிகளையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையினால் நீங்கள் வெளியிடும் குமுறல்களையும். தூர இருந்து பார்க்கவும் கேட்கவும் தான் முடிந்தது.

அப்படி இருந்தும் பாசத்துடன் கதைப்பீர்களே...அதுவே எனக்கு மிகவும் சந்தோசத்தை கொடுத்தது இப்பொழுது அதுவும் ஓய்ந்து விட்டது.

அப்படி இருந்தும் உங்களின் இறுதி நேரத்தை என் கண்முன்னே காட்டி விட்டு சென்று விட்டீர்களே. அந்தப் பார்வையில் அன்பும். பாசமும் எனக்கு தெரிந்தது. அந்தத் தருணம் என்றென்றும் என் நெஞ்சில் நீங்காமல் நிறைந்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்மனைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...!

உங்கள் நினைவுடன்,
உங்கள் அன்பின்
மருமகள் ஸ்றெனி

பெரும் சாதனை செய்வதற்கு
மூன்று நிலைகளைக் கடந்தாக
வேண்டும் அவை:-
மௌனம், எதிர்ப்பு, அங்கிகாரம்
ஆகியவை

- சுவாமி விவேகானந்தா-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவாய் திகழ்ந்த அருமை மாமாவிற்கு...

அக மகிழ்ந்து அணைத்தீரே நம்மை - உம்
அகத்தின் மருமகன்களாய்..!
மாமாவின் பாசம் நாடி வந்த நமக்கு
அப்பாவின் பாசம் காட்டி அசத்தினீரே..!

அன்பை அள்ளிக் கொடுத்தே
நம்மையெல்லாம் கட்டிப் போட்டீர்..!
கட்டவிழ்ந்து நிற்கிறோம் நடுக்காட்டில் - வழி
காட்ட வாரும் ஐயா தயவுடனே..!

உம் சிரிப்பில் தானே
எம் உலகம் உளன்றது..!
உம் அறிவுரைகளின்றிய நம் வாழ்வு
எப்படி சாத்தியமாகும் ஐயா...?

அன்போடு பண்பையும் நமக்கு
ஆசானாய் போதித்தீர்..!
அரு மருந்தாய் இருந்து நம் வாழ்வில்
அத்தனை துன்பமும் நீக்கினீர்..!

உம் போல் ஒரு பண்பாளர்
எம் அப்பாவாய் கிடைத்தமைக்கு
ஏழேழு ஜென்மங்கள் சொன்னாலும் நன்றி
என்றென்றும் ஈடாகாது என்பதறிவோம்..!

உம் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்..!

ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..!

**அன்புடன் உங்கள் மருமகன்கள்**
**சங்கர், சிவகுமார், றமேஸ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புக்கு இலக்கணமான அப்பாவிற்கு

அன்பிற்கு இலக்கணமாக இன்பமாக அப்பா என்று அழைக்கும் உங்கள் வார்த்தை எங்கள் செவியில் ஒலிர்வதை நிறுத்தியது ஏனோ.

துன்பத்திலும் இன்பமாக இருக்கச் சொல்லிக் கொடுத்துவிட்டு எங்களை மீளாத் துன்பத்தில் இருக்க விட்டு சென்றது ஏனோ...?

உங்கள் அன்பை வாரிக்கொடுத்துவிட்டு எங்கள் அன்பை பெறுவதற்குள் எங்களை விட்டு சென்றது ஏனோ...?

அறியாதவர்களை ஆசிர்வதித்து கொள்ளும் உங்கள் மனது எங்களை ஆசீர்வதிப்பதற்குள் எங்களை விட்டு சென்றது ஏனோ...?

அப்பா என்று அழைக்கத் தோன்றும் எங்களை விட்டு உங்கள் அப்பா அம்மாவிடம் சென்று விட்டீர்கள் என்று நினைத்து எங்கள் மனதை ஆற்றிக் கொள்கின்றோம்.

வலி தாங்க உடலைப் பார்த்து வகுண்டு நிற்கும் நான் ................

மருமகன்
றமேஸ்

உற்சாகமாக இருக்கத்
தொடங்குவது தான்
வெற்றிகரமான
வாழ்க்கை வாழத்
தொடங்குவதற்கான
முதல் அறிகுறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுப் பயணத்தின் போது...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பேத்தி பேசுகிறேன்

என் அன்பான அப்பப்பா

நான் உங்களை எவ்வளவு மிஸ் பண்றேன் என்பதை எந்த வார்த்தைகளாலும் விவரிக்க முடியாது நான் உங்களுடன் பேச அழைக்கும் போது, அப்பம்மா எப்போதும் உங்களிடம் தொலைபேசியைக் கொடுத்து சொன்னது "இந்தாங்க உங்கட பேத்தி கதைக்கவாம்" இதை இனி அவர்களால் யாருக்கு சொல்ல முடியும்? நான் உங்களுடன் பேச அழைக்கும் போது நீங்கள் எப்போதும் உங்கள் வாழை தோட்டத்திற்குச் சென்று என்னுடன் பேசினீர்கள்.

உங்களைப் போன்ற ஒருவரை நான் பார்த்ததில்லை, உங்களைப் பற்றி நான் எப்போதும் பாராட்டியிருக்கிறேன். எனது அப்பப்பா ஒரு ஜென்டில்மென் என்று நான் எப்போதும் கூறுவேன்.

எனக்கு ஏதேனும் கேள்விகள் இருக்கும்போது நான் எப்போதும் உங்களுடன் கதைப்பேன், எனக்கு ஒரு விளக்கம் கொடுக்கும்படி கேட்பேன், நீங்கள் கண்டு பிடிக்க எனக்கு உதவினீர்கள், நான் இப்பொழுது யாரைக் கேட்க முடியும் அப்பப்பா? உங்களிடம் மட்டுமே எல்லா பதில்களும் இருந்தன, உங்களுக்கு மட்டுமே பதிலளிக்கத் தெரியும். உங்களைப் போன்ற யாரையும் நான் சந்தித்ததில்லை அப்பப்பா,. நீங்கள் எல்லாவற்றையும் அறிந்திருந்தீர்கள், ஆனால் நீங்கள் மிகவும் எளிமையானவர் உங்களை போன்றவர்கள் யாரும் இல்லை. நாங்கள் ஒன்றாகப் பகிர்ந்த தருணங்கள் நான் எப்போதும் நினைவில் வைத்திருப்பேன். என் வாழ்க்கையில் உங்களைப் போன்ற ஒரு அப்பப்பாவை எனக்கு வழங்கிய கடவுளுக்கு நான் நன்றி சொல்லுகிறேன். நீங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு காட்டிய அன்பை நான் ஒரு போதும் மறக்கமாட்டேன் அப்பப்பா.

உங்கள் உரையாடல்களை நான் மிஸ் பண்றேன், உங்கள் குரலையும், உங்கள் சிரிப்பையும் நான் மிஸ் பண்றேன் அப்பப்பா.

இலங்கைக்கு வருவதற்கான எனது முதல் காரணம் எப்போதும் உங்களைப் பார்ப்பது, உங்கள் முகத்தில் இருக்கும் புன்னகை, உங்களுடன் உரையாடுவது எப்போதுமே சுவாரஸ்யமாக இருந்தது. நான் உங்களிடமிருந்து நிறைய கற்றுக்கொண்டேன்.

முதல் தேவர் கதை நீங்கள் எனக்கு கற்றுக் கொடுத்தீர்கள் நான் அழைத்தபோது அதை உங்களிடம் சொல்லும் படி நீங்கள் என்னிடம் கேட்டீர்கள். எனவே இப்போது உங்களுக்காக இதை இன்னும் ஒரு முறை சொல்லப் போகிறேன். அப்பனே முருகா, சக்தி வடிவேலா, சண்முகா, சிவாயநம, பொன்னம்பல, நீடுழி வாழ்க அப்பப்பா, நீங்கள் இப்போது ஒரு நல்ல இடத்தில் இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன், நீங்கள் எப்போதும் என் இதயத்தில் இருப்பீர்கள்.

உங்கள் அன்பான பேத்தி
விஜித்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களைப் போல் ஒருவர் இனி இல்லை

அன்புள்ள அப்பப்பா,

உங்களைப் போன்ற மற்றொரு மனிதர் இனி ஒரு போதும் இருக்க மாட்டார். அதனால்தான் நாங்கள் இப்போது சோகமாக இருக்கிறோம்.

உங்கள் குரலை எங்களால் கேட்கவோ அல்லது சிரித்த முகத்தை பார்க்கவோ முடியாது. என்றாலும் நீங்கள் எங்களை விட்டு போகவில்லை என்பதை எங்கள் இதயங்களில் ஆழமாக அறிவோம்.

உங்கள் நினைவுகள் எங்களுடன் என்றென்றும் வாழும். உங்கள் அன்புக்குரியவர்கள் உங்களை ஒரு போதும் மறக்க மாட்டார்கள்.

உங்கள் அன்புப் பேரன்
தீபன்

ஒவ்வொரு மனிதனும் பிறந்தது வெற்றி பெறத்தான்
தோல்வியடைய அல்ல (ஹென்றி டேவிட்தோரர்)

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால்
சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை
(ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்)

இரக்கம் காட்டுங்கள் ஆனால் ஏமாந்து போய்விடாதீர்கள்
(மாத் யூ கிரீன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தா உங்களுடன் இனி பேச முடியாதே..!

அன்புள்ள தாத்தா, நாங்கள் உங்களுடன் இனி பேச முடியாது என்பது மிக வருத்தமாக இருக்கிறது. நீங்கள் ஒரு நல்ல மனிதர் தாத்தா. நாங்கள் அவ்வப்போது செல்போனில் பேசினோம் ஆனால் நிஜ வாழ்க்கையில் மூன்று முறை மட்டுமே உங்களை சந்திக்க முடிந்தது.

இது சிறியது ஆனால் நிறைய பொருள் நாங்கள் ஒன்றாகக் கழித்த நேரம் மிகவும் அருமையாக இருந்தது. எதுவும் என்றென்றும் நீடிக்காது. ஆனால் நான் உங்கள் மேல் வைத்திருக்கும் நினைவுகள் மாறாது.

நீங்கள் யார் என்பதற்கும், நீங்கள் என்னுடன் கழித்த நேரத்திற்கும் நன்றி. அது என்றும் மறக்கப்படாது.

என்னுடன் இருந்த காதல் மாறாது.

உங்கள் அன்புள்ள பேரன்
டிசாந்தன்.

| |
|---|
| எல்லோரையும் நம்புவது பயங்கரமானது ஆனால், யாரையுமே நம்பாமல் இருப்பது மிகவும் பயங்கரமானது. *-ஆபிரகாம் லிங்கன்-* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பப்பா நீங்கள் எங்களுடன் இல்லை.

அன்புள்ள அப்பப்பா,

நீங்கள் கனிவாக இருந்தீர்கள் அப்பப்பா. உங்களைப் போன்றவர் யாரும் இல்லை. அப்பப்பா நீங்கள் இங்கே இல்லை என்று நினைப்பது மிகவும் வருத்தமாக இருக்கிறது.

நன் இலங்கைக்கு வந்த போது உங்களுடன் இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

இலங்கைக்கு வந்தபோது நான் இரண்டு முறை மட்டுமே உங்களை நேரடியாக சந்தித்தேன். அப்பப்பா இனிமேல் நாம் வந்தால் கூட நீங்கள் அங்கே இல்லை என்று நினைப்பது மிகவும் வருத்ததமாக இருக்கிறது.

உங்கள் அன்புப் பேரன்
அனுஷன்

எத்தகைய கல்வி
தன்னம்பிக்கையைத்
தந்து ஒருவனைத் தனது
சொந்தக் கால்களில் நிற்கும்படி
செய்கிறதோ அது தான்
உண்மையான கல்வியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிரிவினால் துயருறும் பேத்தி

குமுழமுனை மண்ணில் அவதரித்தேன். திஷாநந்தினி என்று தித்திப்பாய் நாமமிட்டீர்கள். கரம் பற்றி நடை பயில கற்றுத் தந்தீர்கள். அருகில் இருந்த போதெல்லாம் நற்கதைகள் பல கூறி மகிழ்ந்தீர்கள். அம்மப்பா நீங்கள் எனக்கு அறத்தையும் ஆண்டவன் மகிமையையும் அன்புடனே போதித்தீர்கள்

என்னை தாலாட்டி நிலாக்காட்டி சோறூட்டி அன்போடு என்னை அணைப்பீர்கள். குறும்புகள் பல செய்து குதூகலமாக உங்களுடன் விளையாடினேன். பாடசாலை செல்ல ஆரம்பிக்கும் போது உங்களுடனே அழைத்துச் சென்று தந்தைக்கு நிகராக அருகில் இருந்து பாதுகாப்பாக அழைத்து வருவீர்கள். வரும் வழி தனிலே இனிப்புக்காய் நான் அழுகையில் இருபது ரூபாக்கு இனிப்பு வாங்கித் தருவீர்கள். இன்னும் மறக்க முடியவில்லை. அந்த இனிமையான தருணமதை.

அகவை ஒன்பதானது அந்நிய தேசம் அழைத்து நின்றது உங்களின் அரவணைப்பில் இருந்து விடுபடும் காலம். உங்களின் அரவணைப்பில் இருந்தது பொற்காலம். தந்தையின் அரவணைப்பை அறிந்ததில்லை. தந்தை மொழி அறிந்தது இல்லை. தவழ்ந்தது என் நாவில் என் அம்மப்பாவின் மொழி. வருடங்கள் கழிந்தன. வயதிற்கு வந்தேன். மஞ்சள் நீராட்டு விழாவினை மகளின் மகவுக்காய் மனநிறைவாய் நிகழ்த்தி வைத்தீர்கள்.

ஆண்டுகள் பல கழிந்தன கல்யாண வயது கண்ணெதிரே வந்தது கரம் பிடிக்க துணை தனை தேடி திருமண நிகழ்வுதனையும் மன நிறைவுடனும் சந்தோசத்துடனும் செய்தீர்கள். திரும்பினேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய தேசம். மகவு ஒன்றை பெற்றெடுத்து உங்களை பூட்டன் ஆக்கினேன்.

என் மகள் உங்கள் மடி தவழ வேண்டும் என்று நினைத்தேன் முடியவில்லை. காலம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. கடவுளும் கருணை உள்ளம் காட்டவில்லை. கருணையின்றி காலன் அவன் கவர்ந்து விட்டான் உங்கள் உயிரை.

அம்மப்பா உங்கள் பிரார்த்தனையும், இறைபக்தியும், நற்குணமும் ஆண்டவன்திருவடியில் நித்திய வாழ்வாக அமையட்டும்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்களின் அன்புப் பேத்தி
திஷா

---

## எங்களை விட்டு எங்கு சென்றீர்கள் அப்பப்பா

அப்பப்பா நீங்கள் எங்கள் மீது மிகவும் அன்பாக இருந்தீர்கள். நாங்கள் 2018 ஆம் ஆண்டு உங்களிடம் வந்தோம். அப்பப்பா எங்களை பேரா, பேத்தி என்று அன்பாக சொல்வீர்கள் நன்றாகப் படிக்க வேண்டுமென்று கூறினீர்கள். அப்பப்பா மீண்டும் எப்போது வருவீர்கள் என்று தொலைபேசியில் கேட்பீர்கள். எங்களை விட்டு எங்கு சென்று விட்டீர்கள் அப்பப்பா.

உங்கள் பேரப்பிள்ளைகள்
அபி, அஞ்சு, அரண்யா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பப்பாவின் நினைவுகளுடன் பேத்தி

நான் இலங்கைக்கு வந்தபோது, எனக்கு 4 வயது. நான் உங்களுடன் விளையாடினேன், நீங்கள் என்னை சிரிக்க வைத்தீர்கள். நான் உங்களுடன் இருந்த ஒவ்வொரு நிமிடமும் நான் மிகவும் ரசித்தேன். நாங்கள் ஒன்றாக மகிழ்ச்சியாக இருந்த நாட்களை என்னால் என்றுமே மறக்க முடியாது. நான் உங்கள் மடியில் தூங்கினேன். நாங்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து பல இடங்களுக்குச் சென்றோம். எனக்கு பிடித்த பலவற்றை நீங்கள் வாங்கித் தந்தீர்கள். நான் சிரிப்பதற்கும் என் மகிழ்ச்சிக்கும் நீங்கள் ஒரு காரணம். நீங்கள் என்னை எனக்கு பிடித்த இடங்களுக்கு எல்லாம் அழைத்துச் சென்றீர்கள், ஆனால் இப்போது உங்களால் அது முடியாது. நான் உங்கள் கைகளைப் பிடித்துக்கொண்டு நாங்கள் ஒன்றாக நடந்த அந்த நாட்கள் எவ்வளவு சிறப்பானவை. என்னை ஒருபோதும் மகிழ்ச்சியாக வைத்திருக்க நீங்கள் தவறவேயில்லை. நான் மீண்டும் இலங்கைக்கு வரும்போது நீங்கள் அங்கு இருக்க மாட்டீர்கள் என்பது என்னால் நினைத்துப்பார்க்க முடியவில்லை.

உங்களை மீண்டும் பார்க்க முடியாது என்று என்னால் இன்னும் நம்ப முடியவில்லை. நான் உங்களுடன் அதிக நேரம் செலவிட மிகவும் விரும்பினேன், ஆனால் இப்போது அது தாமதமாகிவிட்டது. ஒவ்வொரு நாளும் உங்களை பற்றியே நினைக்கிறேன். நான் உங்களுடன் இருந்த நிமிடங்கள் நினைவுக்கு வருகிறது. நான் உங்களை கவனித்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினேன், ஆனால் என்னால் முடியவில்லை என்று கவலைப்படுகின்றேன். நான் உங்களைப் பார்க்க மிகவும் விரும்பினேன், ஆனால் சூழ்நிலைகள் என்னை அனுமதிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேயில்லை. உங்களுடன் நான் எடுத்த பல புகைப்படங்களைப் பார்க்கும்போது, நினைவுகள் மீண்டும் வருகின்றன. என் தொலைபேசியின் மூலம் நீங்கள் சிரிப்பதை நான் காண்கிறேன். உங்கள் குரலை என்னால் கேட்க முடியவில்லை. நீங்கள் என்னை ஒருபோதும் சோகப்படுத்தவில்லை, ஆனால் இப்போது நீங்கள் என்னை அதிகமாகவே சோகமாக்கி விட்டீர்கள். உங்களைப் பார்க்க நான் எப்போதும் இலங்கைக்கு வர விரும்பினேன். உங்களைப் பார்க்க நான் எப்போதும் ஆர்வமாக இருப்பேன். உங்கள் பழைய புகைப்படங்களைப் பார்த்து ரசிக்கிறேன். உங்கள் முகத்தைப் பார்ப்பது பழைய நினைவுகளைத் தருகிறது. உங்கள் புன்னகையை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை. உங்கள் முகம் என் கண்களில் வரும். நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது என்னால் வர முடியவில்லையே எனும் சோகம் என்னை விட்டு அகலாது. விடுமுறை நாட்களில் நான் இலங்கைக்கு இனி வருவேன். ஆனால் நீங்கள் அங்கு இருக்க மாட்டீர்கள். உங்கள் நினைவுகள் என்றும் எப்போதும் என்னுடனேயே இருக்கும். உங்கள் நினைவுகள் சூழ்ந்த இடங்களைப் பார்த்து உங்களை உணர்வேன்.

என்றும் எண்ணிலா நினைவுகளுடன்
பேத்தி ஷம்மியா

வெற்றி வந்தால் பணிவு
அவசியம்—
தோல்வி வந்தால் பொறுமை
அவசியம் —
எதிர்ப்பு வந்தால் துணிவு
அவசியம்—
எது வந்தாலும் நம்பிக்கை
அவசியம்—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பப்பாவிற்காக ஏங்கும் பேத்தி..!

நான் முதன் முதலாக மூன்று வயதில் இலங்கைக்கு உறவுகளைப் பார்ப்பதற்காக குடும்பத்துடன் வந்தேன். அப்போது எனது அப்பப்பாவையும் நேரில் பார்த்தேன். நாங்கள் அவர் வீட்டில் சில நாட்கள் தங்கினோம். எனது அப்பப்பா எனக்கு தனது ஊரை சுற்றி காட்டினார். தனது அம்மன் கோவிலுக்கு அழைத்து சென்றார். அவருடன் அனைத்து இடங்களுக்கும் போகும் போதும் மிக மகிழ்ச்சி அடைந்தேன். அங்கே உள்ள கிணற்றில் எல்லோரும் சேர்ந்து விளையாடி மகிழ்தோம். நான் மிகவும் சந்தோஷமாக இருந்தேன். என் மீது அன்பும் பாசமும் காட்டினார். என் அப்பப்பாவுடன் இருந்த சில நாட்கள் நான் மகிழ்ச்சியாக இருந்தேன். நீங்கள் ஆறு மாதம் இயலாமல் இருக்கும் போது தொலைபேசியில் கதைப்பேன். இப்போது என் மீது பாசம் காட்ட நீங்கள் இல்லை. நீங்கள் சென்றதிலிருந்து என் முகத்தில் சிரிப்பு இல்லை. நீங்கள் என்னை விட்டு நிரந்தரமாக போன பின் அடிக்கடி உங்களை பார்க்க வரவில்லை என்று நான் மிகவும் வருந்துகின்றேன். இப்போது உள்ள நிலைமையில் உங்களிடம் வர முடியாமல் போனது. அதனால் நான் மிகவும் சோகமாக இருக்கிறேன். ஒவ்வொரு விடுமுறையிலும் உங்களை ஆசையுடன் பார்க்க வந்தேன், ஆனால் முக்கியமான நேரத்தில் உங்களை பார்க்க என்னால் வர முடியவில்லை. இனி நான் இலங்கை வரும்போது என்னை அழைத்து அன்பு காட்டுவதற்கு நீங்கள் இல்லாவிட்டாலும் உங்களுடன் இருந்த எல்லா நினைவுகளுடன் வாழுவேன். உங்களின் பாசத்துக்காக எப்பொழுதும் ஏங்கிக் கொண்டேயிருப்பேன்.

ஏக்கத்துடன் உங்களின் அன்பு பேத்தி
பிரித்தியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பப்பாவின் அன்பை நினைத்துருகும் பேத்தி

அப்பப்பா, நான் எனது சிறு வயதில் இலங்கைக்கு வந்த போது என்னை கோவில்களுக்கு அழைத்துச் சென்றீர்கள், இப்போது என்னை யார் அழைத்துச் செல்வார்கள்...? நான் குழந்தையாக இருந்தபோது நீங்கள் என்னை தூக்கிய நாட்கள் மீண்டும் இனி நடக்காது, இது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. முதலில் நான் வரும்போது சிறு குழந்தையாக இருந்தேன். அதனால் எனக்கு எதுவும் தெரியாது. இப்போது படங்களை பார்க்கும் போது ஆசையாக இருக்கின்றது. நான் 4 ஆண்டுகளாக உங்கள் அருகில் இருக்கவில்லை. நான் உங்களுடன் தொலைபேசியில் பேசும்போது நீங்கள் என்னை அன்புடன் பேத்தி என்று அழைப்பீர்கள். நான் உங்களை மீண்டும் பார்க்க விரும்புகிறேன். ஆனால் என்னால் முடியாது. அதனால் நான் உங்களின் படத்தை பார்த்து நீங்கள் என்னுடன் இருக்கிறீர்கள் என்று நான் நினைப்பேன். இனிமேல் நீங்கள் எப்போதும் என்னுடன் ஒரு கடவுளாக இருந்து என்னை ஆசீர்வதிப்பீர்கள் என்று நம்புகின்றேன். நான் உங்களை மீண்டும் பார்க்க விரும்புகிறேன், நீண்ட நேரம் உங்களுடன் பேச விரும்புகிறேன். நீங்கள் இயலாமல் இருக்கும்போது நான் உங்களைப் பார்க்க விரும்பினேன், ஆனால் என்னால் வரமுடியவில்லை என்று கவலைப்பட்டேன். நான் முழங்காவிலில் உங்கள் வீட்டிற்கு விரும்பி வருவேன். நான் இலங்கைக்கு வந்தபோது நீங்கள் எப்பொழுதும் என்னுடன் விளையாடுவீர்கள். இப்போழுது நான் முழங்காவிலுக்கு வரும்போது யார் என்னுடன் விளையாடுவார்..? நான் இலங்கைக்கு இனிமேல் செல்லும்போது நீங்கள் இல்லாமல் அங்கே எனது பயணம் வித்தியாசமாக இருக்கும். நீங்கள் எப்போதும் என்னை மகிழ்ச்சியடையச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தீர்கள், ஆனால் இப்போது யார் என்னை மகிழ்ச்சியாக வைத்திருப்பார்கள். நான் வந்த காலங்களில் உங்கள் வீட்டில் வாழ்வது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சந்திரனைப் போன்ற உயர்ந்த அன்பை நீங்கள் எனக்குக் காட்டினீர்கள். உங்கள் அன்பான நினைவுகள் எப்போதும் என்னுடனே இருக்கும்.

என்றும் உங்கள் அன்புப் பேத்தி
சரண்யா

**மூப்பு, பிணி, சாக்காடு என்பவை**
**இந்த உடலுக்கு நியதியானவை**
**உடல் தான் அழிகின்றது**
**உயிர் அழிவதில்லை**
**தூங்குவது போலும் சாக்காடு**
**தூங்கி விழிப்பது போலும் பிறப்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் பிரிவினால் துயருறும் பேரன்

எனது ஆசை ஐயாவே நீங்கள் எங்கு சென்று விட்டீர்கள்? உங்களை பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை. உங்களுடன் பேச வேண்டும் போல் இருக்கிறது. நீங்கள் பாடும் பதிகங்களை கேட்க வேண்டும் போல் இருக்கிறது. நீங்கள் அடிக்கடி தனு... தனு... என்று கூப்பிடுவீர்களே அதில் எவ்வளவு அன்பு பாசம் எதை எதையோ எல்லாம் உணர்ந்தேன் ஐயா. இப்போது மட்டும் ஏன் ஐயா கூப்பிடுகிறீர்கள் இல்லை ஐயா, நீங்கள் எனக்கு அடிக்கடி அறிவுரைகளை வழங்குவீர்கள் இனிமேல் எனக்கு உங்களை போல் அறிவுரைகளை யார் ஐயா வழங்குவார்கள்?

இறைவன் மீதும் ஆலயத்தின் மீதும் பாரிய பற்றோடு இருந்தீர்களே. ஏன் ஐயா இறைவன் உங்களுக்கு இப்படி ஒரு நோயை தந்து எங்களிடம் இருந்து சீக்கிரமாக பிரித்து விட்டார். உங்கள் பார்வை, நடை, பேச்சு, மற்றும் செயல்கள் என்பவற்றில் எப்போதுமே கம்பீரம் காணப்படும். எனக்கு உங்களை போல ஒரு கம்பீரமான மனிதனாக வாழத்தான் ஆசை. அப்படியே தான் வாழ்வேன் நான் ஐயா. நீங்கள் மனிதர்களுக்கு முன்னுதாரணமாய் இருந்துள்ளீர்கள் ஐயா.

ஐயா நீங்கள் ஒரு வேளை கூட தோட்டத்தை சுற்றி பார்க்காமல் இருந்ததே இல்லை ஆனால் கடந்த ஆறு மாத காலங்களாக மட்டும் அதை செய்ய முடியவில்லையே ஐயா. நீங்கள் இவ்வளவு காலம் பாதுகாத்த அனைத்தையும் என்னால் முடிந்த வரை பாதுகாத்து எப்போதும் நீங்கள் சந்தோசமாக உங்கள் அப்பா, அம்மா, சகோதரர்களுடன் இருக்க நான் இவைகள் எல்லாம் செய்வன் ஐயா. நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் ஐயா.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்புப் பேரன்
தனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதையும் எதிர்பார்க்காத ஐயாவிற்கு...

நான் உங்களுடன் நேரத்தை செலவழித்தது எனது குழந்தைப் பருவத்தில். ஆனால் அது எனக்கு நினைவில்லை ஐயா. எனக்கு நீங்கள் அம்மப்பா ஆனால் நான் எல்லோரைப் போலவும் ஐயா என்று பாசமா கூப்பிடுவேன். ஐயா உங்களுடன் இருந்து உங்கள் வழி நடத்தலில் வளர்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் அம்மா கதைப்பதை வைத்து அது உங்கள் வழி நடத்தல் என்று அதன் படி நடக்கிறேன், நடப்பேன்.

ஐயா உங்கள் இளம் வயது படத்தைப் பார்க்கும் போது உங்கள் பயணத்தை பற்றியும் நீங்கள் அனைவராலும் எவ்வாறு மதிக்கப் பட்டீர்கள் என்பதையும் கேட்க விரும்பினேன். நீங்கள் என்னை அழைத்து பேசும் போது கனக்க கதைக்கமாட்டேன். ஆனாலும் இப்போது அதை நினைத்து கவலைப்படுகிறேன். ஐயா நான் உங்களுடன் சேர்ந்து செய்ய விரும்பிய விடயங்கள் பல இருந்தன. ஆனால் நான் விரும்பிய ஒன்று உங்களை ஒரு முறையாவது பார்த்து விடவேண்டும் என்று. இது எனது ஆசை மட்டுமல்ல உங்கள் ஆசையும் கூட. ஆனால் அது நடக்க முதல் நீங்கள் எங்களை தவிக்க விட்டு விட்டு சென்று விட்டீர்கள்.

ஐயா நீங்கள் ஒரே சொல்வீர்கள் படித்து ஒரு நல்ல இடத்துக்கு வர வேண்டும் என்று அதை நான் செய்து முடிப்பதற்குள் விதி உங்களை விட வில்லையே. ஐயா நான் எப்போதும் உங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அதை நான் நேரில் உங்களைப் பார்க்கும் போது எனது காசில் எல்லாம் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அது எதையும் நீங்கள் எதிர்பார்க்காமல் எங்கள் எல்லோரையும் விட்டு சென்றுவிட்டீர்கள் ஐயா.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கிறேன்.

பேரன்: சிலக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.11.2017ல் சதாபிஷேக நிகழ்வின் போது......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமையெல்லாம் விட்டு எங்கே போனாய் தம்பி...?

என் உடன் பிறப்பே! எமதருமைச் சோதரனே!
மறைந்த உன் செய்தினை மனம் ஏற்க மறுக்கிறது.
ஒளிவீசம் உந்தன் திருவதனம் இருள் கொண்டு போனதுபோ!
எம் அருகில் கடைசி வரை இருப்பாயென எண்ணியிருக்க
எம் கனவுகளை உடைத்து வெகுதூரம் சென்றதேனோ...?

நெற்றியிலே திருநீறு நித்தம் சூடுபவனே !
வற்றிய போதும் வாயார உபசரித்து உணவழித்த பற்றே
எங்கள் பாச உறவே பிரிந்தாயே எமைவிட்டு...
ஊர் வாழக் கோயில் வைத்தாய்
பெயர் சொல்ல வாழ்ந்து காட்டினாய்
உயர்வான சிந்தனையுடன் உள்ளன்பு கொண்டாய்
அயர் வற்று உழைத்த அற்புத ஆத்மா
விடை பெற்றுச் சென்றதே!....
இறப்பு அனைவருக்கும் நியதி என்றாலும்
மனம் ஏனோ ஏற்க மறுக்கிறது
மறுபடியும் காணத் துடிக்கிறது உன் முகம்!....
என்னில் இளையவன் நீ ஏன், எனை முந்தி நீ சென்றாய் ?
என் கடமை செய்வாயென எண்ணியிருந்தேன்
அன்புதனை பொழிந்த ஆருயிரே அகிலம் பிரிந்ததேனோ?
உந்தன் பேச்சை கேட்டு எந்தன் உள்ளம் உருகுதே
எமையெல்லாம் விட்டு எங்கே போனாய் தம்பி!
இனி உன்னைக் காண்பது எப்போ?
உன் குரல் கேட்குமா என் காது?
மறு ஜென்மத்திலும் வந்து விடு எனக்கு தம்பியாய்..!
ஆத்ம சாந்திக்கு வேண்டுகிறேன் அருள் முத்துமாரியை.....

சின்னக்கா
(திருமதி கனகாம்பிகை வேலுப்பிள்ளை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பக தருவாய் காட்சி கொடுத்தாயே..!

மேன்மைமிகு சைவமும் தமிழும் தழைத்தோங்கிய பொன்னாவெளி எனும் பொன்னும் பொருளும் செல்வமும் செல்வாக்கும் பொங்கி திகழ்ந்த கிராமத்தில் அவதரித்த ஐயா குஞ்சி.

பிறந்த பிறப்பிற்கு பெருமை புகழ் பெயர் எடுத்தாயோ..! கோயில் கோயில் என்று உன் பாதம் பதிக்காத இடமேயில்லை.. பெருமைமிகு பெயருக்கு ஏற்றால் போல் பூசகராய் தடம் பதித்தாய் ஐயா (குஞ்சி). என்னைப் பெற்ற தகப்பனுக்கு தகப்பனாய் தலைவனாய் தக்க தருணத்தில் தாழ்மையுடன் தரும நெறி தவறாமல் சரி சமமாய் சமரசம் பேசி தாழ்மையுடன் தகப்பன் மகன் என்ற பேதமின்றி ஒரு ஆசானாய் முன்னோடியாய் மானிடத்தில் அவதரித்தாய் குஞ்சி. என் வாழ்வே உன்னுயிரன்றோ.. இதை யாரறிவார்? இவ்வுலகில் எத்தனை பேரை வாழ வைத்ததாய் ஐயா (குஞ்சி). உதவிக் கரம் கொண்டு நின்றாய் ஐயா. ஈடு இணை யற்றவனே இறை பாதம் அடைந்தாயோ. ஆல விருட்சம் போல் உன் இன விழுதுகள் உலகெல்லாம் விரிந்து கிடக்குதைய்யா. உதவி என்றாலே ஓடோடி வருவாய். உலகுக்கு செய்த உன் பணி சொல்லி அடங்காது. உறவுக்கு செய்த பணி ஒன்றல்ல இரண்டல்ல. உத்தமனே உனக்கென்று வாழாது உதவிக்கரம் நீட்டி உன்னத தியாகம் செய்தாய். உன் உடன் பிறந்தவர்களுக்கு உன்னை தியாகம் செய்தாய். என் விருத்தெரிந்த நாளில் உங்களுடன் ஓடி ஆடித் திரிந்து எடுத்த ஒவ்வொரு நினைவும் செயலும் சொல்லி அடங்காது.

தகப்பனராய் காணது தரணியில் தெய்வமாய் கண்டேன். பிறந்த பிறப்பிற்கு பெருமையாய் வழிகாட்டி சென்றாயே. ஐயா இனி நான் எங்கு காண்பேன் இதயம் துடிக்கிறது. உன் நினைவாய் எதுவும் செய்யமுடியா நிலையில் இறைவன் கடைசிப் பயணத்தில் கலங்க வைத்து விட்டு விட்டானே. விதியின் விளையாட்டு நான் என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வேன். இறைவன் கொடுத்ததை எடுத்து விட்டான் இனி என்ன செய்வேன் ஐயா. என் வாழ்வின் ஒரு அவதாரத்தை இழந்து விட்டேன்.

மேழ தாளத்துடன் கோயில் கோயில் என்று கோயில் பக்தனாய். குஞ்சி எடுக்காத காவடி இல்லை மிதிக்காத தீ இல்லை. உன் பாதம் பதிக்காத கோயிலுமில்லை ஐயா..! உன் பாதம் இறைவனின் பாதரமே! அவதராமே! இறைவனுக்கு இறைவனாய் இறை பக்தி தந்தாயே! கற்கபதருவாய் காட்சி கொடுத்தாயே! சிவனின் அவதாரமே! இனி எங்கு காண்பேன்...?

ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..!

பேராமகன்
ஏகாம்பரம் சண்முகலிங்கம்

இந்த உலகம் இறைவனுக்குச்
சொந்தமானது. உலகப் பொருட்களில்
எல்லாம் அவரே இருக்கிறார்.
இந்த கோணத்தில்
பார்க்கத் தொடங்கிவிட்டால்
நம் மனம் உயர்வு பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைக்கு ஒரு அத்தான்

அத்தான் நீங்கள் எனக்கும் எனது குடும்பத்திற்கும் அப்பாவாக அம்மாவாக மட்டும் இல்லாமல் எங்களுக்கொரு குலதெய்வமாக இருந்தீர்களே. இப்பொழுது எல்லாம் இழந்தவர்கள் போல் நாம் தனியாகி விட்டோமே.

நீங்கள் அன்பாக இருந்தாலும் சரி கோபமாக இருந்தாலும் சரி சுந்தரி சுந்தரி என்று வாய்நிறைய அழைப்பீர்களே. இனி அப்படி யார் என்னை அழைப்பார்கள்?

உங்களுக்கு முன் நான் இந்த உலகை விட்டு போக விரும்பினேன். அப்படி நடந்திருந்தால் எனக்கு எல்லாமாக இருந்து நீங்கள் எல்லாம் செய்திருப்பீர்களே..? இப்பொழுது அத்தப்பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லையே அத்தான்.

என் பிள்ளைகளை உங்கள் பிள்ளைகளாக நினைத்து செய்ய வேண்டியவைகள் எல்லாவற்றையும் செய்து என்னையும் பிள்ளைகளையும் சந்தோசப்படுத்தினீர்கள். ஆனால், இப்பொழுது எங்கள் அனைவரையும் தவிக்கவிட்டு சென்று விட்டீர்களே.

என் பிள்ளைகள் பெரியப்பா என்றும் என் பேரப் பிள்ளைகள் தாத்தா என்றும் ஓடி ஓடி வருவார்களே. என் பேரப்பிள்ளைகள் தாத்தா எங்கே என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்?

எங்களை எல்லாம் பேணி பாதுகாத்து பேரன்பு செலுத்தி வந்தீர்கள். நீங்கள் இல்லாததை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை அத்தான்.

உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்..!

அன்புடன் மைத்துனி

சுந்தரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் மனதிலிருந்து

மாமா மாமா என்று மகிழ்தழைத்த
உறவென்ற பெரு விருட்சம் உறங்கியதே!
பிரிவென்ற பெருந்துயரம் வாட்டுது எம் உள்ளத்தை
வாழ்ந்து நீங்கள் முடித்ததனால் வாடி மனம் தவிக்கிறோம்

பாரினிலே உங்களுக்கு ஈடான உறவு
நாம் இனிப் பார்ப்பது எப்போ....?
வாழ்ந்தது போதுமென்று நினைத்தோ காலனின்
கட்டளைக்கு கண்ணசைத்து சென்றீர்கள்!
புன்னகை உதடும் பூவிழிப்பார்வையும் என்னென்று
சொல்வோம் எவரிடமும் கிடையாது.....
வெள்ளை உடுத்து வெள்ளை மனம் அழகோடு
பவனி வரும் காட்சி இன்னமும் உறைந்திருக்கு
எம் மனதோடு.....
துயரோடு எமைவிட்டு தூரமாய் சென்றீர்களே மாமா!
நினைவோடு என்றும் நீங்காது வாழ்வோம் நாம்
நீங்கள் பாசமாய் பார்க்கும் பார்வை எங்கே?
நேசமாய் பகிர்ந்த பேச்சு எங்கே?
கண்ணில் காட்டும் கருணை எங்கே?
பந்தமாய், பாசமாய் பகிர்ந்தவையும் இன்று
நித்தமும் எமை வாட்டுகிறதே மாமா!...

சொந்தங்களையும் பந்தங்களையும் உள்ளத்தால் இணைந்து மனதார மகிழ்வு கண்டவர் நெஞ்சார நேசித்து மனமார வாழ்ந்த எங்கள் மாமாவே! நீங்கள் இப்பூமியை விட்டு விடை பெற்றாலும் என்றும் எங்கள் மனதை விட்டு அகல மாட்டீர்கள். நல்ல உள்ளம் ஒன்று இழைப்பாறும் வேளையிலே பிரிவோடு வாடினாலும் பிரார்த்திக்கிறோம் ஆத்ம சாந்திக்கு அருள் முத்துமாரியினை .........

**சின்னக்கா பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறா மகன்- மருமகள் உள்ளத்திலிருந்து...

தந்தையின் வழிப்படுத்தலில்
தயவோடு வாழ்ந்த
தராள மனங்கொண்ட
தந்தையை ஒத்த சித்தப்பாவே
தாங்கொணத் துயிரினில் எம்மைத்
தவிக்கவிட்டு சென்றீரே..!

தந்தைக்கு தந்தையாய்
தார்பரிய நற்தொழிலாம்
தலையாய கமத்தொழிலை
தன் மனத்தோடு ஆற்றி
தரணியிலே நற்பெயரோடு
தயவோடு வாழ்ந்தீர்

எருது பூட்டி ஏர் பிடித்து
எம்மினிய விவசாயத்தை
ஏற்றமுடன் போற்றி தினம்
எளிமையோடு வாழ்ந்திருந்தீர்
எந்தவொரு வேளையிலும்
என்னைத் தம்பியென்று அழைத்தீர்
எப்பிறப்பில் காண்பேனோ
என் இனிய சித்தப்பாவை..!

திரு.திருமதி பொன்னுத்துரை மகேஸ்வரி
(பெறா மகன்-மருமகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சண்முகம் பாலசிங்கம்
# அவர்களுக்கு என் அன்பு காணிக்கை

உங்கள் வாழ்வினைக் கூறும் மலர்தனில்
அழகுபடுத்த என் உள்ளக் கூற்று.
பொன் விளையும் பூமியாம் பொன்னாவெளியில்
வந்துதித்து வளம் பல பெற்று வாழ்ந்து
மட்டுவில் நாடு தனின் மணம் முடித்து
உற்றார் உறவினர் உடன் அன்புடன் கொண்டாடி
மகிழ்ந்திருந்து நல்வழி காட்டிய நாயகனே
சித்தப்பாவாய் என்னுடன் இல்லாது
அப்பாவாய் இருந்து கல்வி புகட்டி
பெரும் கல்விச் செல்வம் தேடித் தந்தீர்கள்
அண்ணனவர் அருணாசலமென குமுழமுனையில்
அனைவருக்கும் முதன்மையாய் இருந்தவர்
தம்பியவர் பூனகரியில் தனித்திருப்பது போல.
எண்ணியவர் தம்பியை குமுழமுனை வந்தடைய வேண்டினார்.
வேண்டுதலை ஏற்று குமுழுமுனையில் குடியமர்ந்து
வாழ்ந்து வந்தார்.
முத்து மாரி அம்மன் அருள் பெற்று
அடியார்கள் போற்று பூசகரானார்
பெற்றெடுத்த செல்வங்கள் சீராக வாழ்ந்து வர
என்றும் மறவாமல் எல்லோர் இதயங்களில்
நீங்கா இடம் பிடித்து வாழ்ந்து வந்த செம்மல்
முத்து மாரி அம்மனின் அருள் பெற்று
நோய் போக்க வழி செய்வார் .
மறைந்து விட்ட மாய உலகில்
மறவாமல் நாம் இருக்க மலைபோல் வாழ்ந்தவரே
முப்பத்தியோராம் நாள்தனிலே
உங்களை முத்தாக எண்ணி கலங்குகின்றேன் நான்.

அ. பாலசிங்கம்
குருபரன் வீதி,
முழங்காவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் கண் நினைவில் நிலைத்து விட்ட காவல் தெய்வமே - என் அத்தான்

என் அத்தானை பற்றி கூறுவதற்கு தாள் போதாது. இருந்தும் சில வரிகளில் கூற விரும்புகிறேன். என் அத்தானைப் பற்றி கடந்த காலங்களில் என் அத்தானுடன் இருந்த வரலாற்றை நினைத்து பார்க்கிறேன். 1969 ஆம் ஆண்டு தொடக்கம் 1975 ஆம் ஆண்டு வரை என் அத்தானின் அரவணைப்பில் இருந்தேன் பாதுகாவலராகவும், கல்வி, விளையாட்டு , கலை நிகழ்வு, பல கோயில்கள் என்று பல வழிகளை காட்டிச் சென்ற தெய்வம். என்னை கண்ணும் கருத்துமாக பார்த்து பல நல்பழக்கங்களை காட்டி என்னை வளர்த்து விட்டு இன்று எம்மை தவிக்க விட்டு சென்று விட்டார். என் அத்தானின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என் கண்ணீர்த் துளிகளால்..

பாசவிளக்கு ஏற்றி வைத்தீர்
பாதியில் காலன் அணைத்தானோ
பேச வார்த்தைகள் வரவில்லை
பேதைகளாய் பிதற்றுகின்றோம்

நீங்கள் விதைத்த வயல்கள் கூட
நின் வரவைப் பார்க்கின்றதே
வீட்டுத் தோட்ட மரங்களெல்லாம்
தலை சாய்த்துச் சோகம் சொல்கின்றதே


நீங்கள் வளர்த்த செல்ல பிராணி கூட
உங்கள் நினைவால் கண்ணீர் வடிக்கின்றதே
உறவு என்னும் வலை வீசி
உதிர்ந்து போன தேனோ


அத்தான் மீண்டும் எப்போ நான் காண்பேன்
மேதினியில் உம் வரவை
மீண்டும் ஓர் பிறப்பு எடுத்தால்
என் அத்தானாய் நீங்கள் வந்திடுங்கள்


துயர் பகிரும்
அன்பு மச்சான்
அ. ஞானசீலன் (அமுதன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய நிகழ்வுகளில்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உம் வழியில் ஒரு மகனாய்...!

நினைவழியா பெருமகனாய் நித்திலத்தில் மாமணியாய்
நீறுகொண்ட நெற்றியுடன் வீறுநடை கொண்டவரே!
கடலிரைக்கும் பொன்வெளியில் பாலகனாய் வந்து
பூநகரில் பாக்கியத்தை பாக்கியமாய் பெற்று
குமுழமுனைப் பதியினிலே மனமகிழ்ந்து வாழ்ந்தீரே!

முத்துமாரி அன்னையவள் முதல் மகனாய் வந்து
முழுநேர சேவகனாய் அடிதொழுது வணங்கி
அன்னையவள் அடியவர்க்கு அப்பனாய் வாழ்ந்து
"அப்பா" என்று அருநாமம் அன்பாலே பூண்டீரே...!

ஆலமர நிழலாகி அனைவரையும் காத்து
விழுதாக அல்லாமல் வேராக நின்றீர்
ஈரமில்லா கல்மனத்தின் கறையான்கள் அரித்து
வீழ்ந்தீரே மரமாக.... போனீரே விழுதாக....!

விழுதென்றும் வீழாது விதையாகும் நினைவாக
பொழுதொன்றும் மறவாமல் போற்றுவோம் சிவமாக
அம்பாளின் அடிபோற்றி அழகாக வாழ்ந்திட்ட
ஐயாவே சொல்கின்றோம் "சாந்தி, சாந்தி ..."

மோகனமூர்த்தி
குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயா என்று அழைத்திட...

ஒரு வயதில் தந்தையையிழந்து - தந்தை என்ற
ஒரு வகையான பாசமும் அறியாது - அப்பா என்ற
ஒரு வசனமும் ஒலித்திடாது - ஐயா என்ற
ஒரு வார்த்தையில் கண் கண்டது தந்தையாக உங்களை!

முப்பத்தைத்து வயதினில் எனக்கு கிடைத்த பொக்கிஷம்
மூச்சடக்க வைத்துவிட்டு சென்றீர்களே ஐயா..!
முறைக்கு முறை ஐயா ஐயா என்று நான் அழைக்க
முழுமனதோடு என்னை மாஸ்ரர் என்று அழைப்பீரே..!

அறிவுரை பல கூறி அற்புதமாய் எனை அழைப்பீர்
அதிகாரத்தோடு என்னிடம் அறிவுரையும் கேட்டிடுவீர்
அல்லும் பகலும் அல்லல் வந்தவுடன் ஓ என்று
அழகாக ஓதிடுவீர் அற்புதமாய்ப் பல பாடல்களை

உம் உடலிலே பொல்லாத நோய் வந்த முதல்
உம் அருகில் நானிருந்து உத்தமமாய் பணி செய்து
உம் மேனியதை உவப்போடு காத்து நின்றேன்
உம் உயிர் பிரியும் வேளை உம் அருகில் நானில்லை..!

தண்ணீர் முதல் வெந்நீர் வரை தயவோடு கேட்டிடுவீர்..!
தாமதமின்றி நானும் நுட்பமாக தந்து நின்றேன்
தங்கள் பொன்னுடல் நோய் தீர்க்க பேராதரவாய் நானும்
தயவுடனே தந்து நின்றேன் நன் வெந்நீர் தனையே..!

உம் இனிய நற் பிள்ளைகளோடு என்னை இணைத்து
உம் நான்காவது மகனாய் என்னோடு அல்லும் பகலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவி வந்த மகத்தான நாட்களை என்றென்றும் என்
உள்ளத்தை விட்டு நீக்கிட முடியுமோ..?

காலங்கள் மாறலாம் கோலங்கள் மாறலாம் - நான்
கலந்து உம்மோடு காலங்கள் மாறிடாது - என்
கண்ணான பிள்ளைகளோ தாத்தா தாத்தா என்று தினம்
களிப்போடு சுகம் விசாரிக்க காடுவனம் சென்றீரோ?

வந்தோரை வரவேற்று வகை வகையாய் உபசரித்து
வண்ணக் கதை பேசிடும் உங்கள் வதன முகத்தை
வார்த்தைகளால் எடுத்தியம்பிட முடியாதையா - நாம்
வண்ணமொழி பேசிடவே வந்தொரு முறை பாருமையா..!

அன்பாகப் பழகிய ஐயாவே
அல்லல்பட்டு நாமிருக்க
அன்போடு வளர்த்த உம்மினிய
அண்ணன் அக்கா தம்பி தங்கையர்
அரவணைத்து எடுத்த உங்கள்
அன்பான பிள்ளைகள் யாவரும்
அவனியிலே உங்கள் பிரிவை
அறிந்த உம் பேரர்கள், பூட்டர்கள்
அழுது புலம்பிடும் வேளையிலே
ஆத்மார்த்தமாய் வேண்டுகிறோம் - உங்கள்
ஆத்மா சாந்தி பெற்றிட
அமைதியாய் தொழுதிடுவோம்

ஐயாவின் அரவணைப்பில் வாழ்ந்த
திரு.கஜேந்திரன் (மாஸ்ரர்), அபிசாத், யுகேந்தினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாவின் இழப்பில் இருளான நம் குடும்பம்..!

ஈர் பத்து வருட மேல்
இணையிலா உறவிது..!
கொழும்பு அங்கிளென்றும் அன்ரியென்றும்
கொண்டீர்கள் எம்மோடு குடும்ப நட்பு..!

குறைவிலா அன்பைத் தந்து
நிறை நெஞ்சொடு என்றும் வாழ்த்தும்
தரமிக மனிதர் ஐயா நீங்கள்
தரணியை விட்டு சென்றதேனோ...?

உம் உறவது கிடைத்தல் கண்டு
உள் மனமது நாளும் மகிழ்ந்தோம்
எம் பிள்ளைகள் எல்லோர் மீதும்
எண்ணிலா அன்பை இறைத்தீர்..!

உம் அன்பு எமக்கு போதாதென்றோ
உம் பிள்ளைகள் எல்லோர்க்கும் உரைத்தீர்
இதுவும் என்றும் எம் குடும்பமே
இணையிலா அன்பு செய்யுங்கள் இவர்க்கு என்று..!

உம் உருவில் எமை நேசம் செய்ய
உம் பாசமிகு குடும்பம் உள்ளதென்றோ
உறங்க சென்றீர் நிரந்தரமாய்..? - இவ்
உண்மையில் உறைகிறது நம் தேகம் ஐயா..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலது நொந்த போதும்
எம்முடன் வந்தேயிருந்தீர்..!
உம் தேகம் நலன் பெறவே
நாம் கொண்ட முயற்சிகள் தோற்றதுவோ?

தேம்பியழுகிறோம் உம் பிரிவில் - இனி எமை
தேடி வர மாட்டீர் என நினைத்து
தேற்ற வழி இல்லை ஐயா..! - உம்
தோற்றம் மட்டும் நிழலாய் எம் முன்னே..!

ஐயாவின் ஆத்மா அமைதி கொள்ள ஆண்டவனை
வேண்டுகிறோம்..!

பிரிவுத் துயர் பகிரும்
அருமைத்துரை - நிஷாந்தி
(கொழும்பு அங்கிள் & அன்ரி) குடும்பம்

> உங்களின் தோல்வி எங்கே ஒளிந்துள்ளது
> தெரியுமா? பிரச்சினைகள் வரும் போதல்ல
> பிரச்சனைகள் கண்டு நீங்கள் பயந்து விலகும்
> போது. *-பாரதியார்-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கு சென்றீர்கள் அப்பப்பாவே..?

பொன்னாவெளி மைந்தனே
சான்றோர் போற்றும் பொக்கிஷமே
கருணை உள்ளம் கொண்ட அப்பப்பாவே
இனி எப்போ உமைக் காண்போம்

தந்தைக்கு நிகர் தந்தையாய்
தலைமுறைக்கோர் குல விளக்காய்
தரணி போற்றும் தலை மகனே
எமை தவிக்க விட்டு சென்றதெங்கே..?

அன்பு மொழி பேசி அருகிருப்பீர்
அம்மை அருள் வேண்டி நோய் தீர்ப்பீர்
அருகில்லை அங்கலாய்க்கிறோம்
அம்மை அவள் உடனிருக்க
எங்கே சென்றீர்கள் அப்பப்பாவே..?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.
ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..!

துயர் பகிரும்
திருமதி. பிரபாகரன் சந்திரிக்கா (ஆசிரியை)
கிளி / முழங்காவில் ம.வி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கோயில் மாமா" எனும் கோபுரம் சாய்ந்ததுவோ...?

எண்பதுகளில் சுழி போட்ட உன்னத உறவிது
எண்ணும் வருடங்களில் நீச்சல் அடிக்குது நினைவிது
எண்ணமும் செய்கையும் உமக்கென்றும் இறையே..!
எண்ணி எல்லோர்க்கும் நல் அமுதளிக்கும் உம் திறமே..!

கோயிலால் உருவான கொடைப் பந்தம் ஒன்று - எம்மிடம்
கோபுர கலசமாய் மிளிர்ந்தது கண்டு மன மகிழ்ந்தோம்..!
துணையாய் என்றும் எமக்கிருந்து தூக்கி அழகு பார்த்து
துன்ப துயரம் எல்லாம் பகிர்ந்து நீக்கி தூணாய் நின்றீரே..!

குடும்பமாய் கொண்ட நட்பு போதாதென்று எண்ணி - உம்
குடும்பமாய் எம்மை ஆக்கி அரவணைத்து மகிழ்ந்தீர்..! - எம்
மனதிலே என்றும் அன்பை விதைத்தே - கோயில்
மாமாவாய் குடிகொண்டீர் நம் உள்ளக் கமலமதில்...!

எங்களைக் காண என்றும் ஓடி வரும் உம் பாசம் கண்டு
எண்ணி நாளும் எம் மனம் ஆனந்தக் கண்ணீர் சிந்தும்..! - இன்று
திங்களைக் காண நாளைப் போல - இருட்டில்
திக்கு முக்காடி இருக்கிறோம் கோயில் மாமாவே..!

என்றும் எம் நல்ன் பார்த்தே எல்லாம் செய்தீர்
எண்ணிட முடியா உங்கள் உதவிகள் கண்டு - இன்று
நன்றிக் கடனை மட்டும் நம் மனதில் தாங்கிக் கொண்டு
நா வறண்டு நிற்கிறோம் நீர் இல்லா இவ் உலகில்...!

அம்மனை வழிபட வருகையில் - எமக்கு
உம் தரிசனம் கிடைப்பதோ பேரானந்தம்..!
கம்பீர நடையும் கனத்த குரலும் செல்வாக்கு மிகு முகமும்
காதல் சிரிப்பும் என்றும் கண்முன்னே நிற்குது ஐயா..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரங்கள் பார்க்காமல் எப்போதும் வந்து - எம்
பாரங்கள் எல்லாம் பாதியாய் குறைத்து - உம்
பார்வையாலே நமக்கெல்லாம் அருளி மீதியைக் குறைக்கும்
மீட்பர் அல்லவோ நீர் எமக்கு..! மீண்டு வர மாட்டீரோ...?

சொந்தமாய் உமை நாம் எம்மோடு
கொண்டாடி மகிழ்ந்ததை விட - எம்
சொத்தாய் நினைத்தே மதித்து போற்றி வாழ்ந்தோம்..!
தேற்றிட வழியின்றி தேம்பி நிற்கிறோம்..!

இயலாமையில் கூட - எம்
அயலாமையைத் தேடி வந்து நலன் கேட்கும் - உம்
செயலதிலே தோற்றே போனோம் - உம் அன்புக்கு
ஈடாய் தர ஏதுமின்றி கலங்கி நிற்கிறோம்..!

எங்கள் குடும்பத்தின் ஏற்றமிகு பிதாமகனே..!
எண்ணி உம் நினைவுகளில் கண்ணீர் சொரிகிறோம்
வழிகாட்டியற்ற வாழ்க்கைக் கப்பல் மாலுமிகளாய்
தள்ளாடி நிற்கிறோம்..! தாங்க வர மாட்டீரோ..?


ஆண்டவனாய் அங்கிருந்து எமையெல்லாம்
ஆசிர்வதித்து அருள் செய்யும் - உம்
ஆத்ம அமைதிக்காய் நீர் பூவிட்ட
அம்பாள் பாதம் பணிந்து வேண்டுகிறோம்..!

ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..! ஓம் சாந்தி..!

உம் பிரிவால் தவித்து நிற்கும்
சச்சிதானந்தம் குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தநாள் நிகழ்வுகளின் போது...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

முத்தெய்வம் காவலிடும் பொன்வெளியில் பிறந்து
அழகாக ஆச்சியுடன் அருங்கதைகள் பேசி...!
நிதமழைத்து அரவணைத்து அன்புமழை பொழியும்
முழங்காவில் பதிவாழ்ந்த ஆருயிரே தாத்தா!

ஸ்ரீமுத்து மாரிக்கு பணியாளாய் இருந்து
அவளருளால் எமைக்காத்த வைத்தியனும் நீரே!
பெருவாழ்வு நாம் வழ அகல்விளக்காய் நீங்கள்
ஒளிதந்து காத்தீரே அன்புருவே தாத்தா!

பார்முழுதும் இதயங்கள் பணித்தேற்றும் உங்கள்
பவளமுகம் தனைக்காண பரிதவிக்கும் உள்ளம்!
சிரிப்பொன்றால் கதை சொல்லும் ஐயாவே உங்கள்
கையாலே நூல்போட்டால் கலைந்துவிடும் துன்பம்!

காலமிட்ட கட்டளையால் காலனவன் கவனம்
காதுகளில் இடிவிழுந்த கலங்கியது உள்ளம்!
எம் மனது மறுக்கிறது உங்களது பயணம்
அம்மையவள் திருவடியில் சாந்திபெற இரங்கும்!

பேரப்பிள்ளைகள்
சாமினி, கிரித்திகன், ரக்சனா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் வடித்த சிற்பங்களாய் நாம்

அன்பை சுமந்த ஆலமரம் ஐயா நீர்
அதில் ஆடி விழுந்திடும் விழுதுகள் ஐயா நாம்
பாசப் பார்வையிலே வலை வீசுவீரே
நேசத்தொடு என்றும் நெஞ்சை மகிழ வைப்பீரே..!

உம் கையருகில் நாமெலாம் இருக்க
காலன் அவன் உம்மை கவர்ந்து சென்றதேனோ..?
இன்னும் எத்தனை பிறப்பெடுத்தாலும்
உம்முடன் இருந்த காலங்கள் திரும்பிடுமோ ஐயா..?

முதுமை எனும் மூடன் உம்மை நெருங்கினாலும்
இளமை மிடுக்குடனே என்றும் மிளிர்ந்தீர்..!
உம் அம்பிகையின் பொற்பாதங்கள் சரணடைய
நோயெனும் தேரேறி வானுலகு சென்றீரோ ஐயா..?

வாழ்வில் புயல்கள் சூழ்ந்தாலும் - என்றும் உம்
வதனமதில் புன்னகை மங்காதே..!
நீர் வடித்த சிற்பங்களாய் நாம் இங்கே
தரணியிலே தனியாக தவிக்கிறோம் ஐயா..!
உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்..!

அன்புப் பேத்தி சனா

*மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது தடைகளற்ற
வாழ்க்கையல்ல தடைகளை வெற்றிகொண்டு
வாழும் வாழ்க்கை*

*-ஹெலன் கெல்லர்-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி வருமா இவையெல்லாம்.....?

ஐயா என அழைத்த
அந்த நாள் இனி வருமா?
உங்கள் புன்னகை பூத்த
அந்த பூமுகம் இனி வருமா?

நீங்கள் எனை சொந்த மகள் போல்
சொத்தாய்ப் பேணி
சேர்ந்து வாழ்த்த அந்தக்காலம்
இனி வருமா?

போய் வருவேன் என நான் சொன்னால்
புன்னகையுடன் வழியனுப்புவீர்கள்
இனி யாரிடம் சொல்வேன்..?
யாரிடம் பெறுவேன் அப் புன்னகையை..?

எனக்கு தந்தையாய் தாயாய்
ஆசானாய் அன்பாய் இருந்து
ஆலோசனை பல கூறுவீர்கள் ஐயா
இனி எப்படிக் கிடைக்கும் அதெல்லாம்..?

உங்கள் நிழலில் இருந்தேன் நான்...!
மரமாக நின்று எனை பேணிக் காத்து வளர்த்தீர்..!
மரமாகி வளர்ந்து கிளைபரப்பும் முன்பே நீங்கள்
மறைந்தது ஏனோ ஐயா...?

நீங்கள் எங்கு இருந்தாலும்
எனக்கு உங்கள் ஆசியுண்டு
என்ற நம்பிக்கையில்
உங்கள் பேத்தியின் கண்ணீர்ப் பூக்களை
உங்களுக்கு காணிக்கையாக்குகின்றேன்..!

பேத்தி
யூஜினா எதிஸ்லாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமாத் தாத்தா எப்போது எழும்புவீர்..?

எம்மை தூக்கி சீராட்டி பாசம் பொழிந்த எங்கள் மாமாத் தாத்தாவே..! எங்களைப் பார்க்க ஓடோடி வருவீர்கள். வரும் போதெல்லாம் உங்கள் அருகிலிருந்து கதை பேசுவோம். உங்கள் மடியில் எம்மைத் தூக்கி வைத்து கொஞ்சுவீர்கள். உங்களோடு ஒன்றாய் இருந்து படங்கள் எடுத்து மகிழ்ந்தோம்.

முழங்காவிலுக்கு நாங்கள் வரும் போதெல்லாம் எங்களை பார்த்து சிரித்து கதைப்பீர்கள். நாங்கள் மகிழ கதைகள் சொல்வீர்கள். பிடித்ததெல்லாம் வாங்கித் தருவீர்கள். கடைசியாக உங்களைப் பார்க்க வரும் போது நீங்கள் படுத்திருந்தீர்கள். நீங்கள் நித்திரை கொள்வதாக சொன்னர்கள். நீங்கள் அப்புசாமியிடம் போய்விட்டதாக சொல்கிறார்கள். எப்போது மீண்டும் எங்களைப் பார்க்க வருவீர்கள்..? நித்திரையிலிருந்து எப்போது எழும்புவீர்கள் மாமாத் தாத்தா..? இனி உங்களைப் பார்க்க கோவிலுக்கா நாங்கள் வர வேண்டும்..?

அன்புப் பேத்திகள்
சக்ஷி, சகஷி


பெருமைக்காரன் கடவுளை இழக்கிறான்!
பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான்!
கோபக்காரன் தன்னையே இழந்து விடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னார் பூசித்த ஆலயம்.....







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையார் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

விநாயக அகவல் முற்றிற்று

# சங்கடகர சதுர்த்தி

மாதம் தோறும் வரும் தேய்பிறைச் சதுர்த்தி தினமே சங்கடகர சதுர்த்தியாகும் இவ் விரதத்தைக் கடைப்பிடிக்க இருப்பவர்கள் மாசி மாதத்தில் செவ்வாய்க்கிழமையில் வரும் சங்கடகர சதுர்த்தியிலே ஆரம்பிக்க வேண்டும். மாசி மாதத்தில் இவ்வாறு செவ்வாய்க்கிழமையில் அமையாவிட்டால் மற்றைய மாதங்களில் செவ்வாய்க்கிழமையில் வரும் தினத்தில் ஆரம்பிக்கலாம். அன்றைய தினம் பகல் முழுவதும் உபவாசமிருந்து சதுர்த்தி பூசை முடித்து இரவு உணவருந்தி விரதம் முடிக்க வேண்டும். அன்றைய தினம் விநாயகப் பெருமானிற்கு நெய் தீபம் ஏற்றி வன்னிப் பத்திரத்தால் அர்ச்சனை செய்து வழிபடுவதால் அடியார்களது பலவித சங்கடங்கள் எல்லாம் நிவர்த்தி யாகும். என சமய நூல்கள் கூறுகின்றன. இப்படி வழிபட்டு அடியவர்கள் பல துன்பங்கள் நீங்கியதாக வரலாறு கூறுகின்றது. இந்தியாவில் இவ் விரதத்திற்கு முக்கிய இடம் கொடுத்து சிறப்பாகச் செய்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# சிவபுராணம்



**தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னுந் தேன்.**

**திருச்சிற்றம்பலம்**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.
கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் போராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்*

**சிவபுராணம் முற்றிற்று**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்



காப்பு:

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்கு செல்வம் பலித்து கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று உவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறுஇடும் வேலவன் நித்தம் வருக
சிரிகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி யொவ்வும்
குண்டலி யாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறுஇரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்துஅணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன் திருவடியை உறுதியென்று எண்ணும்
எந்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினை காக்க
விழிசெவி இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்து இருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல் துணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்ரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புறக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகு பல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பெயர் சொல்லவும் இடி விழுந்துஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தோதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்குச் செதில் செதிலாக
சொக்கு சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணல் எரி
தணல்எரி தணல்எரி தணல்அது ஆக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயிர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ்சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தறணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத்ட் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழ் ஒளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே ! கதிர்வே லவனே !
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே ! சங்கரன் புதல்வா !
கதிர்காமத்து உறை கதிர்வேல் முருகா !
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா !
செந்தின்மாமலையுறும் செங்கல்வராயா !
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யான் உனைப்பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை
முருகனைப் படினேன் ஆடினேன்
பரவசமாக ஆடினேன் நாடினேன் ஆவினன்
பூதியை நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொர்ணமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க, மலைக்குரு வாழ்க !
வாழ்க வாழ்க, மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க,
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய் பிரியம் அளித்து
மைந்தஎன் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
கலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறு உருக்கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்பர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றவர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல் எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்குரு சங்காரத்தடி
அற்ந்தென உள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்து உண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத்து ஆட்கொள்ள எந்தனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேன பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இரும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலா போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா......... சரணம்!

*கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.*

"பிறையே கலங்காதே உன்னுள் தான்
பூரண சந்திரன் புதைந்துள்ளான்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்



பிறக்கும் போது கொண்டு வந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் போது கொண்டு போவதில்லை இடை நடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன் கச்சி ஏகம்பனே. 01

ஓயாமல் பொய்சொல்வார் நல்லோரை நிந்திப்பார் உற்றுப்பெற்ற
தாயாரை வைவார் கதிஆயிரஞ் செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமையண்டினர்க் கொன்றும்
ஈயார் இருந்தென்ன, போயென்னெ கச்சியேகம்பனே. 02

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமல் குத்திரங்கோள்களவு
கல்லாமல் கைத்தவரோடு இணங்காமல் கனவினும் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தேகையர் மாயையிலே
செல்லாமல் செல்வந் தருவாய், சிதம்பர தேசிகனே! 03

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னினம்பலவன்
அடிசார்ந்து நாம் உய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே.04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவாதிருக்க வரம்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இதுஎப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே அதுகாண் நல் மருந்துனக்கே. 05

ஐயுற் தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றியூர் உடையீர் திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப் பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே. 06

பொன்னால் பிரயோசனம் பொன்படைத்தார் கங்குண்டு
- பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டு அத்தன்மையைப்
- போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்லர் உண்டு உன்னைப்
- பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு காளத்தியீச்சரனே. 07

வருந்தேன் பிறந்தும் இறந்தும் மயக்கும் புலன் வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றிலேன் புகழ் வாரிடத்தில்
இருந்தேன் இனியவர் கூட்டம் விடேன் இயல் அஞ்செழுத்தாம்
அரும்தேன் அருந்தவன் நின்அருளால் கயிலாயத்தானே. 08

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கம் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க இருக்கையிலே
மண்ணுண்டு போகுதையோ கெடுவீர் இந்த மானுடமே 09

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டு விட்டோம் இனிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண்டஎள்ளே யெழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் நமக்குத் துணையு முண்டே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவி துணை
ஓம் சக்தி

# கௌரிகாப்பு

திருச்சிற்றம்பலம்

காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணீயல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொளிந்தானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்து எம்மைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினையாவும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமப் பூச்சுவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற்கு அரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு தவமிருந்து
பக்தி மனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

கௌரிகாப்பு முற்றிற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

1. வெண்தாமரைக்கு அன்றி நின்பதம்
   தாங்க என் வெள்ளை உள்ளத்
   தண்தாமரைக்குத் தகாது கொலோ?
   சகம் ஏழும் அளித்து
   உண்டான் உறங்க, ஒழித்தான் பித்தாக,
   உண்டாக்கும் வண்ணம்
   கண்டான் சுவைகொள் கரும்பே!
   சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நாடும் பொருள்சுவை சொற்சுவை
தோய்தர, நாற்கவியும்
பாடும் பணியில் பணித்து அருள்வாய்
பங்கய ஆசனத்தில்
கூடும் பசும்பொன் கொடியே!
கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே!

3. அளிக்கும் செந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்து, உன் அருள் கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடும் கொலோ?
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு,
களிக்கும் கலாப மயிலே!
சகல கலாவல்லியே!

4. தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும், சொல்சுவை தோய்
வாக்கும், பெருகப் பணித்து அருள்வாய்
வட நூற்கடலும்,
தேக்கும், செந்தமிழ்ச் செல்வமும்,
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே!

5. பஞ்சு அப்பி இதம்தரு செய்யபொன்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே?
நெடுந்தாள் கமலத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்
நாவும், அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு! ஒத்து இருந்தாய்
சகல கலாவல்லியே!

6. பண்ணும், பரதமும், கல்வியும்
தீஞ்சொல் பனுவலும், யான்
எண்ணும் பொழுதுஎளிது எய்த நல்காய்
எழுதா மறையும்,
விண்ணும், புவியும், புனலும்,
கனலும், கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!

7. பாட்டும், பொருளும், பொருளால்
பொருந்தும் பயனும், என்பதால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே!

8. சொல்விற்பனமும், அவதானமும்,
கவி சொல்லவல்ல
நல்வித்தையும், தந்து அடிமைகொள்வாய்,
நளின ஆசனம்சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலம் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரச அன்னம் நாண, நடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே!

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணிரச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடி உண்டேனும்
விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத ,ளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!

## பொருள்

கல்வி, நீண்ட ஆயுள், கபடு இல்லாத நட்பு, நிறைந்த செல்வம், எப்போதும் இளமை, பிணி இல்லாத ஆரோக்கியமான உடல், சலிப்பு வராத மனம், அன்பு நீங்காத மனைவி, புத்திர பாக்கியம், குறையாத புகழ், சொன்ன சொல் தவறாமல் இருப்பதற்கான குணம், எந்தத் தடையும் ஏற்படாத கொடை(அளித்தல்), செங்கோல் வளையாமல் பரிபாலிக்கும் அரசன், துன்பமில்லாத வாழ்வு, உன் பாதத்தின்மேல் பக்தி, இந்தப் பதினாறுக்கும் அப்பால் உன் தொண்டர்களை (பக்தர்களை) என்றும் பிரியாத கூட்டு. இவற்றை அருள வேண்டும், அபிராமியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என் னேஎன்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 01

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய் 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் 03

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள் நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய் 04

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளி கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய் 05
மானேநீ நென்னலை நாளைவந் துங்களை

நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித் தாட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய் 06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்அரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேல் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய் 07

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் 08

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற் றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய் 09

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன் தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலார் எம்பாவாய் 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உயர்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமைஏலோர் எம்பாவாய் 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நற் றில்லை சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும் 12
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய் 13

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தார் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய் 14

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய் 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையர்க் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப்பூம் புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் 17

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் 18

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றார்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்
19

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பகல் எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய் 20

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய் 21

*திருச்சிற்றம்பலம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

## எங்கள் அன்பு ஐயா

# அமரர் சண்முகம் பாலசிங்கம்

பொன்னாவெளியில் பொன்னெனெ உதித்து, தந்தை தாய் அரவணைப்பிலே வளர்ந்து, மனைவி, மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை உறவினர்கள் சூழ் நல் வாழ்வு வாழ்ந்து, உவந்து சைவப் பணியாற்றி, சமய வித்தகராய் வாழ்வாங்கு வாழ்ந்து ஐயாவாய் அப்பாவாய் மிளிர்ந்து, வளம் பல கண்டு இவ் வையகத்தை விட்டு அம்பாள் பாதக் கமலங்களை சரணடைந்து விட்டார்.

இப் பிரிவுத்துயர் கேட்டு ஓடோடி வந்தோர்க்கும், உடனிருந்து உதவிகள் பல செய்தோர்க்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தந்தோர்க்கும், பாதாதைகள் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோர்க்கும்,

நோய் வாய்பட்டிருந்த காலத்தில் நேரம் தவறாது வந்து சிகிச்சை அளித்த வைத்திய கலாநிதி ஞானசீலன் குணசீலன் அவர்களுக்கும், அவரை பராமரித்தோர்க்கும்,

ஈமக்கிரியைகளின் போது கிரியைகள் அனைத்தும் ஒருங்கிணைப்பு செய்த யாழ் வைற் ஹவுஸ் ஸ்தாபகத்தினருக்கும், அவற்றை முறையாக செய்தோர்க்கும், உணவு ஆகாரம் வழங்கியோர்க்கும், ஒலிபெருக்கி வாகன வசதிகள் செய்தோர்க்கும், மாயனக் கிரியைகளுக்கு உதவிய உறவினர்கள் நண்பர்களுக்கும்,

அனைத்து வழிகளிலும் ஆறுதல் கூறி அரவணைத்த உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும்

இம் மலரை அச்சேற்றி தந்த ஜெயஸ்ரீ அச்சகத்தினருக்கும் என்றென்றும் எம் நன்றிகள் உரித்தாகட்டும்



இங்ஙனம்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவ

*சண்முகம் + *செல்லம்மா

- சிவகாமவல்லி
- ஏகாம்பரம்
- கனகாம்பிகை
- **பாலசிங்கம்**
  - *தனபாலசிங்கம்
  - பேரின்பநாதன் + புஸ்பராணி
    - விஜித்தா
    - பிரதீபன்
    - டிசாந்தன்
    - அனுஷன்
  - *யமுனாராணி
  - தேவராணி
    - திசாநந்தினி + ஜெனார்த்தனன்
      - அர்ஸினி
  - கதிர்காமநாத + சுதாரஞ்சினி
    - அபிநயன்
    - அஞ்சயன்
    - அரண்யா
- *அமிர்தலிங்கம்
- * தர்மலிங்கம்
- *மக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்சாவழி

*கந்தையா + * மீனாட்சி

*மகாலட்சுமி

சிவபாக்கியம்

சிவகாமசுந்தரி

லிங்கம்

திர்காமநாதன் + சுதாரஞ்சினி
அபிநயன்
அஞ்சயன்
அரண்யா

தணிகாசலநாதன் + ஸ்றெனிஜா
ஷம்மியா
பிரித்தியா
சரண்யா

கமலராணி + சங்கர்
தனுசன்

சசிகலாராணி + சிவகுமார்
சிலக்ஷன்
கவிசன்

பேபிராணி + கமலதாஸ்
சஜின்

*அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு



சுவாமி விவேகானந்தர்

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை
செய்கிறான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி

**"நன்னெறியே இறைவணக்கம்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம். 021 221 9129